# வானவில்

**VAANAVIL**

| | | | |
|---|---|---|---|
| இதழ் | 174 | ஆனி | 2025 |
| ISSUE | 174 | June | 2025 |


# பதவிப் பங்கீடு மட்டும் மக்களுக்கான தீர்வல்ல!

**இ**லங்கையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மே 6 ஆம் திகதி நடைபெற்றது. தேர்தல் முடிவடைந்து ஒரு மாதத்துக்கு மேலாகியும், நாட்டிலுள்ள பெரும்பாலான சபைகளில் ஆட்சி நிர்வாகம் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை.

தென்னிலங்கையைப் பொறுத்தவரையில், அரசாங்க கட்சியான தேசிய மக்கள் சக்தி ஒரு புறமும், ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகள் மறுபுறமாகவும், பல்வேறு சபைகளில் நிர்வாகத்தை அமைப்பதற்குப் போட்டி போடுகின்றன.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை, பெரும்பாலான தமிழ் கட்சிகள் நிர்வாகத்தை அமைப்பதற்குத் தேவையான அறுதிப் பெரும்பான்மையைப் பெறாததால், பல கட்சிகள் கூட்டுச் சேர்ந்து நிர்வாகத்தை அமைக்க முயல்கின்றன.

தென்னிலங்கை கட்சிகளின் நிலைமையையும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் செயல்படும் கட்சிகளின் நிலையையும் நோக்கும் போது, "கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம்" என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

கடந்த வருடம் நொவம்பரில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கு உட்பட முழு நாட்டிலும் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற தேசிய மக்கள் சக்தி, நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளில் சுமார் 20 இலட்சத்தை இழந்து, மொத்த உள்ளூராட்சி சபைகளில் பாதியளவான சபைகளிலேயே வெற்றி பெற்றுள்ளது. தேசிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரை, ஆறு மாத காலத்தில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சி பெரும் பின்னடைவு என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.




அதே நேரத்தில் எதிர்க்கட்சிகளும் எந்தவொரு சபையிலும் தனியாக நிர்வாகத்தைக் கைப்பற்றும் அளவுக்கு வெற்றி பெறவில்லை. அதனால் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும், ஏனைய எதிர்கட்சிகளான சிறீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன முன்னணி, சர்வஜன சக்தி என்பன சில சுயேட்சைக் குழுக்களையும் சேர்த்துக்கொண்டு சில சபைகளில் நிர்வாகத்தை அமைக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை ஒரு உண்மையை எடுத்துக் காட்டுகிறது. அதாவது, எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டால்தான் தேசிய மக்கள் சக்திக்கு ஈடு கொடுக்க முடியும் என்பதே அந்த உண்மை.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவின் பின்னர், பட்டறிவின் பாடத்தால் இப்பொழுது அதிகாரத்தைப் பெறுவதற்காக ஒன்றுபடுபவர்கள், கடந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இந்த ஐக்கியத்தை எட்டியிருந்தால், ஜனாதிபதித் தேர்தல் முடிவே வேறு விதமாக இருந்திருக்கும்.

ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கபட்ட வாக்குகளில் சுமார் 43 சத வீதமான வாக்குகளைப் பெற்றே (விருப்பு வாக்குகளையும் சேர்த்து) அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவானார். அதே

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# ஏகாதிபத்தியத்தின் முற்றுகைக்குள் ஈரான்

'ஒபரேஷன் ரைசிங் லயன்' (Operation Rising Lion) என்ற பெயரில் ஈரான் மீது இஸ்ரேல் ஜூன் 13 ஆம் திகதி வான்வெளி வாயிலாகவும் ஈரானில் இரகசியமாக இயங்கும் மொசாட் ஏஜெண்டுகள் மூலமாகவும் தாக்குதல் நடவடிக்கை ஒன்றினை ஆரம்பித்துள்ளது. இதற்கு பதிலடியாக ஈரான் 'ஒபரேஷன் ட்ரூ பிராமிஸ் 3' (Operation to Promise III) என்று பெயரிட்டு ஏவுகணைகள் மூலம் இஸ்ரேலைத் திருப்பித்தாக்கி வருகின்றது.

மத்திய கிழக்கில் இஸ்ரேலை இராணுவ வலுவுள்ள நாடாக மாற்றுவதன் மூலம், ஏனைய மத்திய கிழக்கு நாடுகளை அச்சுறுத்தி, மத்திய கிழக்கின் எரிசக்தி வளங்களை கையகப்படுத்தும் திட்டத்தை அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள், இஸ்ரேலின் உருவாக்கத்திலிருந்தே வெற்றிகரமாக அமுல்படுத்தி வருகின்றன. இவர்களின் சதி வலையில் விழாது தற்போது எஞ்சியிருக்கும் ஒரேயொரு நாடு ஈரான் மட்டுமே.

ஈரான் இஸ்லாமிய அடிப்படைவாத நாடு, அங்கு ஜனநாயகம் இல்லை, மனித உரிமைகள் மீறப்படுகின்றன, அணுசக்தி கொண்ட இராணுவ வல்லரசாக உருவெடுத்து வருகின்றது; சிரியாவில் கவிழ்க்கப்பட்ட அசாத் அரசாங்கத்திற்கும் காஸாவில் ஹமாஸ், லெபனானில் ஹிஸ்புல்லா மற்றும் யேமனில் ஹூத்தி ஆகியவற்றிற்கும் ஈரான் ஆதரவளித்து வருகின்றது; இது போன்ற ஈரானுக்கு எதிரான பிரச்சாரங்களை இஸ்ரேல், அமெரிக்கா, பிரித்தானியா, மேற்கு ஐரோப்பிய நாடுகள் இடைவிடாது கடந்த முப்பது வருடங்களாக செய்து வருகின்றன.

சவூதி அரேபியா, கட்டார், ஓமான், குவைத், பஹ்ரேன் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற மத்திய கிழக்கு முடியாட்சிகளுக்கு முண்டு கொடுத்து அந்நாடுகளின் எரிசக்தியை மலிவு விலையில் பெற்று தங்களது தொழிற்துறையை வளம்படுத்தி வரும் மேற்கத்தைய நாடுகள், முதலாளித்துவ ஜனநாயகம் நிலவும் ஈரானில் ஜனநாயகம் இல்லை என்று கூறுவது முரண்நகையானது.

2023, ஒக்ரோபர் 7 ஹமாஸின் இஸ்ரேல் மீதான தாக்குதலைத் தொடர்ந்து, இஸ்ரேலின் தாக்குதலில் காஸாவில் 56 ஆயிரத்திற்கு (இதில் 70 வீதம் குழந்தைகளும் பெண்களும்) மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டும் பல ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயும் இலட்சக்கணக்கானோர் காயப்பட்டுமுள்ளனர். அத்துடன் ஹமாஸின் தாக்குதலின் பின்னர் மேற்கு கரையிலும் லெபனானிலும் ஐயாயிரம் பேர் வரையில் இஸ்ரேலால் கொல்லப்பட்டுமுள்ளனர்.

இதைவிட, லெபனானைத் தளமாகக் கொண்டு பலஸ்தீனர்களை ஆதரித்து நீண்ட காலமாக இஸ்ரேலுக்கு எதிராக இராணுவத் தாக்குதல்களை நடத்தி ஹிஸ்புல்லா அமைப்பினர் பலவீனப்படுத்தப்பட்டும் சிரியாவில் மேற்கத்தைய சார்பு அரசொன்று நிறுவப்பட்டும் உள்ளது. இதற்கு அடுத்ததாக மேற்கத்தைய ஏகாதிபத்தியத்தின் திட்டம் ஈரானுடனான யுத்தமே என்பதை 'வானவில்' ஆசிரியர் தலையங்கங்களில் கூறி வந்துள்ளோம்.

ஈரான் சில வாரங்களில் அணுகுண்டைத் தயாரித்துவிடும் என்பதாலேயே அதன் மீது தாக்குதலைத் தொடுத்துள்ளோமென இஸ்ரேல் பிரதமர் திரும்பத்திரும்பக் கூறி வருகின்றார். இவர் கடந்த முப்பது வருடங்களாகவே எத்தனை தடவை ஈரான் அணுகுண்டைத் தயாரித்துவிடும் என்ற புரளிக்கதையை உலகெங்கும் பரப்பி விருகின்றார் என்பதை ஒரு வீடியோ ஆவணமாக வெளியிட்டுள்ளது. அதேவேளையில் குறைந்தது 90 அணு ஆயுதங்களை தம்வசம் வைத்திருக்கும் இஸ்ரேல், ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்க முடியாதென்று சொல்லவதற்கு என்ன யோக்கியதை இருக்கின்றது?

ஈரானின் அணுசக்தி திட்டம் 1957 ஆம் ஆண்டு ஷாவின் ஆட்சியின் கீழ் அமெரிக்காவின் ஆதரவுடன் தொடங்கியது. 1979 இல் ஈரானின் இஸ்லாமியப் புரட்சியின் பின்னர் ஈரான் அத்திட்டத்தை பல வருடங்களாக கிடப்பில் போட்டது. கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் ஈரான் மீண்டும் அத்திட்டத்தை தொடங்கியது. 2006 இல் ஈரான் மீது அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதாகக் குற்றஞ்சாட்டி பொருளாதாரத் தடைகளை விதித்தன. ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை அணுசக்தி அமைதி முயற்சிகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படும், அணுகுண்டு தயாரிக்கும் எண்ணமே கிடையாதென ஈரான் திரும்பத்திரும்ப கூறி வருகின்றது.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரித்தானியா, பிரான்ஸ் ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே 2015 இல் அணுசக்தி ஒப்பந்தமொன்று கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின்படி, பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டு ஆக்கபூர்வ தேவைகளுக்கு யுரேனியம் செறிவூட்ட ஈரானுக்கு அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ளதாகக் கூறி 2018 இல் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த டொனால்டு ட்ரம்ப் அமெரிக்காவை அதிலிருந்து விலக்கினார். அத்தோடு, ஈரான் மீது மீண்டும் கடுமையான பொருளாதாரத் தடைகளையும் விதித்தார்.

2024 இல் மீண்டும் ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் அமெரிக்காவும் ஈரானும் ஈரானின் அணுசக்தி திட்டம் தொடர்பாக ஓமானில் மறைமுகமாக ஐந்து தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். பேச்சுவார்த்தைகளில் நல்ல முன்னேற்றம், உடன்பாடு எட்டப்படலாம், ஈரானுக்கு அணுகுண்டு தயாரிக்கும் எண்ணம் கிடையாதென அமெரிக்க தரப்பிலிருந்து ஊடகங்கள் வாயிலாக செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. ஆனால் இறுதி ஒப்பந்தம் எட்டப்படும் நிலைக்கு அண்மையாக வந்தபோது, ஹமாஸ், ஹிஸ்புல்லா மற்றும் ஹூத்தி அமைப்புகளுக்கு வழங்கும் ஆதரவினையும் கைவிட வேண்டுமென்ற புதிய கோரிக்கையையும் அமெரிக்கா கச்சிதமாக முன்னே தள்ளி முட்டுக்கட்டையை போட்டுவிட்டு, ஏதோ ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்திற்கு உடன்பட மறுத்ததாக இப்போது கதைவிடுகின்றது.

ஈரானுக்கு அணுகுண்டு தயாரிக்கும் எண்ணம் கிடையாது என்பது சர்வதேச அணுசக்தி முகமை உட்பட உலக நாடுகளுக்கு நன்கு தெரியும். ஈரானில் ஆட்சி மாற்றம் ஒன்றினை ஏற்படுத்தி, ஈரானை ரஷ்யா – சீனா அச்சிலிருந்து பிரித்து, எரிசக்தி வளங்களை கொள்ளையடிப்பதுதான், பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியாக பலவீனப்பட்ட நிலையிலிருக்கும் மேற்கத்தைய ஏகாதிபத்தியத்தின் திட்டம். அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவே ஜூன் 13 இல் இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதலைத் தொடுத்துள்ளது.

அடுத்து அமெரிக்காவும் இஸ்ரேலுடன் இணைந்து கொள்ளலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறானதொரு நிலை உருவாகினால் ரஷ்யா, சீனா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் நிலைப்பாடு என்ன? மூன்றாம் உலகப்போர் பிரகடனப்படுத்தப்படுமா? எது எப்படியோ, ஈரானிய மக்கள் வீரத்துடன் சியோனிஸத்தையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்துப் போராடுவார்கள் என்பதை நாங்கள் உறுதியாக நம்பலாம்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

# அரகலயவை முறியடித்து கோத்தபாயவின் ஜனாதிபதி பதவியைக் காப்பாற்றியிருக்கலாம்! -முன்னாள் திறைசேரி செயலாளர் சிறிவர்த்தன

2022 இல் 'அரகலய' என்ற போராட்டத்தின் மூலம் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை பதவி விலக வைத்த நிகழ்வு குறித்து பல நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

அவற்றுள் சேனா தொரடெனியா எழுதிய "காலிமுக எதிர்ப்பு: அமைப்பு மாற்றமா அல்லது அராஜகமா?", தேசிய சுதந்திர முன்னணி தலைவர் விமல் வீரவன்ச எழுதிய "ஒன்பது: மறைக்கப்பட்ட கதை" என்பன முக்கியமான நூல்கள். இந்த நூல்களில் அரகலய போராட்டத்தின் பின்னணியில் அமெரிக்கா இருந்ததாக – குறிப்பாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் சமபந்தப்பட்டு இருந்ததாக – குற்றம் சாட்டினர்.

அரகலய போராட்டம் குறித்து முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவும் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். அதில் அவர், "என்னை ஜனாதிபதி பதவியிலிருந்து வெளியேற்ற சதி செய்யப்பட்டது" எனக் குறிப்பிட்டாலும், அமெரிக்காவை நேரடியாகக் குற்றம் சாட்டவில்லை.

அதேநேரத்தில் பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த அபேவர்த்தன, கோத்தபாய ராஜபக்சவை ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேற்றியதில் வெளிநாட்டுத் தலையீடு இருந்தது என பகிரங்கமாக நாடாளுமன்னத்தில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலைமையில் ஓய்வு பெற்றுச் செல்லும் நிதியமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன (Mahinda Siriwardana), "இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சி: நெருக்கடியிலிருந்து மீட்சிக்கான பயணம் பற்றிய பிரதிபலிப்பு" என்ற தலைப்பில் அரகலய போராட்டம் பற்றிய நூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார்.

இதன் வெளியீட்டு விழா ஏப்ரல் 8ஆம் திகதி காலிமுகத் திடலில் நடைபெற்றது. முதல் பிரதியை இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் நந்தலால் வீரசிங்க பெற்றுக்கொண்டார்.

இந்த நூலில் அரகலய போராட்டத்துக்கான சூழ்நிலைகளை சிறிவர்த்தன ஆராய்ந்துள்ளார். 2022 முதல் 2025 வரை அவர் நிகழ்த்திய 34 உரைகள் இதில் இடம் பெற்றுள்ளன.



மகிந்த சிறிவர்த்தன

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கு 2022 காலகட்டத்தில் மத்திய வங்கி தவறான தகவல்களை வழங்கியதாக சிறிவர்த்தன குறிப்பிடுகிறார். அது மட்டுமின்றி, பொதுஜன பெரமுன கட்சியின் பொருளாதார விவகாரங்களுக்கான பிரிவினரும் போத்தாவுக்கு தவறான தகவல்களை வழங்கியதாக அவர் குறிப்பிடுகிறார்.

இந்த தவறான ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்காவிட்டால், அரகலய போராட்டம் முறியடிக்கப்பட்டு, கோத்தபாயவின் ஜனாதிபதி பதவி காப்பாற்றப்பட்டிருக்கலாம் என சிறிவர்த்தன சுட்டிக்காட்டுகிறார்.

கோத்தபாயவின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்த பாரிய கடன்கள், குறைந்த வரி விதிப்பு, தவறான பொருளாதாரக் கொள்கைகள், கோவிட் – 19 நோய்த் தாக்கம், ரஸ்ய – உக்ரைன் போர், மத்திய வங்கி மற்றும் நாணய நிதியத்தின் துரோக நடவடிக்கைகள் என்பன விரிவாக ஆராயப்பட வேண்டும் என சிறிவர்த்தன குறிப்பிடுகிறார்.

2024 பெப்ருவரி 17 இல் சிறிவர்த்தன நிகழ்த்திய ஒரு உரையில், ஜனாதிபதிக்கு தவறான தரவுகளை வழங்கியது மட்டுமின்றி, பொருளாதாரக் கொள்கையின் ஒட்டுமொத்த போக்கிலும் அவரைத் தவறாக வழிநடத்தியுள்ளனர் என்றும், இது ஒரு திட்டமிட்ட சதி நடவடிக்கை என்றும், முன்னாள் திறைசேரிச் செயலாளர் சிறிவர்த்தன ஒரு அதிர்ச்சிகரமான கருத்தை வெளியிட்டார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உள்நாட்டில் உருவாக்கிய தீர்வுகளை வழங்கியவர்களை விமர்சித்த சிறிவர்த்தன, வேறு விதமான மாற்றுக் கருத்துகளை ஜனாதிபதி கோத்தபாய கேட்க முடியாதபடி தடுக்கப்பட்டார் என்றும் கூறுகிறார். போருக்குப் பிந்தைய இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கு உள்நாட்டுத் தீர்வுகளை மட்டும் பரிந்துரைத்தவர்கள், சர்வதேச கடன் மதிப்பீட்டு நிறுவனங்களால் வழங்கப்பட்ட ஆலோசனைகளைப் புறக்கணித்ததாகவும் சிறிவர்த்தன குறிப்பிட்டிருக்கிறார்.

2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை தடுத்திருக்க அல்லது குறைத்திருப்பதற்கான வாய்ப்பு இருந்தது. மத்திய வங்கியின் சில ஆலோசகர்கள் சர்வதேச நிதியத்துடனான பேச்சுவார்த்தையை நேர காலத்தோடு ஆரம்பிக்கும்படி கூறிய ஆலோசனையை அரசாங்கம் நிராகரித்தது. அதற்குக் காரணம் சரியான நேரத்தில் சரியான முடிவெடுக்கும் நிலையில் ஜனாதிபதி கோத்தபாய இருக்கவில்லை என முன்னாள் திறைசேரிச் செயலாளர் சிறிவர்த்தன தனது நூலுக்கான முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

2020ஆம் ஆண்டில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்த பின்னர், நாட்டின் அந்நியச் செலாவணி தீர்ந்து போகும்வரை அரசாங்கம் உள்நாட்டுத் தீர்வையே தொடர்ந்தும் நம்பிக் கொண்டிருந்ததாக சிறிவர்த்தன குறிப்பிடுகிறார்.

இந்த நிலைமைகள் காரணமாக ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நுழைவதற்கான வாய்ப்பு உருவானது.

2022ஏப்ரலில் டாக்டர் வீரசிங்க மத்திய வங்கி ஆளுநர் பதவிக்கு அழைக்கப்பட்டார். ஆனால் அதற்கு முன்னதாக தேசிய பொருளாதாரம் மீள முடியாத விதத்தில் சேதமடைந்திருந்தது. நாடு முற்றிலும் உதவியற்ற நிலையில் இருந்தது.

மத்திய வங்கி ஆளுநர் டாக்டர் வீரசிங்க, திறைசேரிச் செயலாளர் சிறிவர்த்தன (இந்தப் புத்தகத்தின் ஆசிரியர்), முதலில் பிரதமராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் இருந்த ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்கான

முயற்சிகளை எடுத்தனர்.

ரணில் விக்கிரமசிங்க மீது என்னதான் விமர்சனங்கள் இருந்தாலும், அரசியல் வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், நெருக்கடியான நேரத்தில் அவர் நாட்டுக்கு வழங்கிய தலைமைத்துவத்தைப் பாராட்ட வேண்டும் எனவும் சிறிவர்த்தன குறிப்பிடுகிறார்.

அரகலய போராட்ட காலத்திற்கு முன்னரும் பின்னரும் ஏற்பட்ட இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்கள் குறித்து முன்னாள் திறைசேரிச் செயலாளர் தனது "இலங்கையின் பொருளாதார மறுமலச்சி: நெருக்கடியிலிருந்து மீட்சிக்கான பயணம் பற்றிய பிரதிபலிப்பு" என்ற நூலில் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இதில் இன்னொரு வேடிக்கையான விடயம் என்னவெனில், சிறிவர்தனவின் புத்தக வெளியீடு 2025 ஏப்ரல் 8ஆம் திகதி நடைபெற்ற போது, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டவர் வேறு யாருமல்ல, அரகலய போராட்டத்தின் மூலம் நன்மை பெற்று ஜனாதிபதியாக வந்துள்ள அநுரகுமார திசாநாயக்க தான்.

(ஒரு விடயம் சிறிவர்த்தனவின் புத்தகத்தை வாசிக்கும் பொழுதும், இலங்கையின் வேறு பல பொருளாதார நிபுணர்களின் எழுத்துக்களைப் படிக்கும் போதும் தெரிகிறது. அதாவது, இவர்கள் எல்லோரும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1977 இல் அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கையின் ஆதரவாளர்களாகவும், அதன் காரணமாக சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற ஏகாதிபத்திய வட்டிக்கடைக்காரர்களின் ஆதரவாளர்களாகவும் இருக்கின்றனர் என்ற உண்மையே அது)

# டியாகோ கார்சியாவில் (Diego Garcia) அமெரிக்க இராணுவத்தள கட்டுமானத்தை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்கிறது!

சமீபத்திய செயற்கைக்கோள் படங்கள் டியாகோ கார்சியாவில் அமெரிக்காவின் பெருந்தொகையான B-2 குண்டுவீச்சு விமானங்கள், C-17 சரக்கு விமானங்கள், விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் தாங்கிகள் என்பனவற்றைக் காட்டியுள்ளன. இது அமெரிக்க ஏகாதிபத்தியம் மத்திய கிழக்கிலும், ஈரான், யேமன் (Yemen) என்பனவற்றின் மீதும் இன்னொரு ஆக்கிரமிப்பை நடத்துவதற்குத் தயாராவதை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

பிரித்தானியா சட்டவிரோதமாகக் கைப்பற்றிய டியாகோ கார்சியா தீவை அமெரிக்காவுக்குக் நீண்டகால குத்தகைக்குக் கொடுத்த பின்னர், அமெரிக்கா அதைத் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வருகிறது. 2001 இல் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமிக்கவும், 2003இல் ஈராக்கை ஆக்கிரமிக்கவும் அமெரிக்கா இத்தீவைப் பயன்படுத்தியதுடன், இன்று யெமன் (Yemen) நாட்டின் மீது நடத்தும் மிருகத்தனமான தாக்குதலுக்கும் இதைப் பயன்படுத்தி வருகிறது.

அமெரிக்கா டியாகோ கார்சியாவிலிருந்து தினசரி 60 தடவைகளுக்கும் மேலான விமானத் தாக்குதல்களை யேமன் நாட்டின் மீது இந்தத் தீவிலிருந்து நடத்துவதுடன், சவூதி அரேபியா யேமன் நாட்டின் மீது மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்புக்கும் உதவி வருகிறது.

அதேநேரத்தில் இந்தத் தீவிலிருந்து ஈரான் மீது விமானத் தாக்குதல் நடத்தும் நோக்கத்துடன், போர் வெறியர் டொனால்ட் ட்ரம்ப் ஈரானுக்கு பகிரங்கமாக எச்சரிக்கையும் விடுத்து வருகின்றார்.

டியாகோ கார்சியா உட்பட சாக்கோஸ் தீவுக்கூட்டங்கள் (Chagos Archipelago) "பிரித்தானிய – இந்திய கடல் ஒப்பந்தம்" என்ற மோசடித்தனமான ஒபபந்தம் மூலம் சட்ட விரோதமாகக் கைப்பற்றப்பட்ட பகுதியாகும்.

அமெரிக்க இராணுவத்தளம் நிறுவுவதற்காக சாக்கோஸிய மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இந்த ஏகாதிபத்திய தளத்திலிருந்து 2,000 கிலோ மீட்டர்களுக்கும் குறைவான தூரத்தில் உள்ள இலங்கைக்கு இது ஒரு நேரடி அச்சுறுத்தலாகும்.

1974 இல் அப்போதைய பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க, இந்தத்தளம் இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியமாக இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு ஒரு நேரடி அச்சுறுத்தல் எனச் சரியாகவே குறிப்பிட்டார். அவரது கருத்து சரியென்பதை அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், இந்தப் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையைச் சீர்குலைத்தல், சமாதானத்துக்கெதிரான குழிபறிப்பு நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இலங்கை அரசாங்கத்தைப் பின்வருமாறு கோருகின்றது:

டியாகோ கார்சியாவிலிருந்து எல்லா அமெரிக்க யுத்த விமானங்களையும் அகற்றும்படி கோரவும்.

இந்த இராணுவத்தளத்தை அகற்றும் வரை, எல்லா விதமான அமெரிக்க இராணுவ விமானங்களுக்கும், யுத்தக் கப்பல்களுக்கும் இலங்கை விமான நிலையங்களிலும் துறைமுகங்களிலும் தடை விதிக்கவும்.

இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்திரம் என்ற கருத்துருவை ஐ.நாவில் மீண்டும் புதுபபிப்பதுடன், அமெரிக்க இராணுவமயமாக்கலுக்கு எதிராக சர்வதேச எதிர்ப்பை உருவாக்கவும்.

மௌனமாக இருப்பதற்கான காலம் முடிவடைந்து விட்டது. இலங்கை நிச்சயமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும், இராணுவமயமற்ற – சுதந்திரமான இந்து சமுத்திரத்துக்காகவும், இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்க யுத்த இயந்திரம் அதிக மரணங்களையும், அழிவுகளையும் கொண்டு வருவதற்கு எதிராகவும் நிற்க வேண்டும்.

## ஈரான் ஒருபோதும் சரணடையாது

*- அயதுல்லா அலி கொமேனி*

இஸ்ரேல், ஈரான் இடையே கடந்த ஜூன் 13 இலிருந்து தொடர்ச்சியாக தீவிர வான்வழி போர் நடைபெற்று வருகிறது. இரு நாடுகளும் பரஸ்பரம் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்நிலையில், 'ஈரான் சரணடைய வேண்டும்' என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஜூன் 17ந் திகதி கூறியிருந்தார்.

இஸ்ரேலுடன் போர் தொடங்கிய பிறகு ஈரான் மதத் தலைவர் அயதுல்லா அலி கொமேனி முதன் முறையாக நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் ஜூன் 18ந் திகதி உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

'திணிக்கப்பட்ட போருக்கு எதிராக ஈரான் உறுதியாக நிற்கும். அதேபோல திணிக்கப்பட்ட அமைதிக்கு எதிராகவும் உறுதியாக நிற்கும். மேலும் ஈரான் யாரிடமும் ஒருபோதும் சரணடையாது.

**தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...**

# மேற்கு கரையில் இஸ்ரேல் செய்த குற்றங்கள்

**1948** இல், புதிதாக அறிவிக்கப்பட்ட இஸ்ரேல் அரசு பலஸ்தீன நிலத்தில் 78 சதவிகித நிலத்தைக் கைப்பற்றிக் கொண்டது. பலஸ்தீன மக்கள்தொகையில் பாதிக்கும் மேலானோரை (7,50,000 பேர்) அவர்களது சொந்த கிராமங்கள் மற்றும் நகரங்களிலிருந்து வெளியேற்றியது. இந்தச் செயலை ஐ.நா பொதுச் சபையின் தீர்மானம் 181 (1947) ஐ மீறித்தான் இஸ்ரேல் செய்தது. பலஸ்தீன நிலத்தை ஒரு பகுதியில் பலஸ்தீன மாகவும் மறுபகுதியை யூத அரசாகவும் பிரிப்பதற்கு அழைப்பு விடுத்தது. இதற்காக இஸ்ரேல் நடத்திய பயங்கர இனப்படுகொலைதான் நக்பா (Catastrophe – பேரழிவு) என அழைக்கப்பட்டது. விரைவில் தங்கள் வீடுகளுக்குத் திரும்புவோம் என்ற நம்பிக்கையுடன் பலஸ்தீனர்கள் காஸா, மேற்கு கரை, கிழக்கு ஜெருசலேம் மற்றும் அண்டை அரபு நாடுகளில் ஒன்றுகூடினர். ஆனால் அதுபோன்று எதுவும் நடக்கவில்லை. பலஸ்தீனர்கள் இன்னும் அந்த நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள்.

### 1967 ஆக்கிரமிப்பு

1967 இல் மேற்கு கரை, கிழக்கு ஜெருசலேம், காஸாவை இஸ்ரேல் கைப்பற்றியது. குறைந்தது 7,50,000 பலஸ்தீனர்கள் இந்த இரண்டாவது வெளியேற்றத்தில் தங்கள் நிலங்களிலிருந்து துரத்தப்பட்டனர். இது நக்சா (Setback – பின்னடைவு) என அழைக்கப்பட்டது. அதே ஆண்டு ஐ.நா பாதுகாப்புக் கவுன்சில் தீர்மானம் 242 ஐ நிறைவேற்றியது. இதன் மூலம் இஸ்ரேல் இந்த மூன்று பகுதிகளில் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவர அழைப்புவிடுத்தது. அது முதல் ஐ.நா. இந்தப் பகுதிகளை முறையாக '1967 முதல் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள்' என குறிப்பிடத் தொடங்கியது. 1999 ஒக்ரோபர் முதல் ஐ.நா. "ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பிரதேசங்கள்" (Occupied Palestinian Territories - OPT) என்ற வார்த்தையை அதன் அதிகாரப்பூர்வப் பெயராக ஏற்றுக்கொண்டது.

### ஓஸ்லோ II மற்றும் நிலப் பிரிவினை

1995 செப்டம்பரில், பலஸ்தீன விடுதலை அமைப்பு (PLO) மற்றும் இஸ்ரேல் அரசு மேற்கு கரை மற்றும் காஸா பகுதி பற்றிய இஸ்ரேல்–பலஸ்தீன இடைக்கால ஒப்பந்தத்தில் (ஓஸ்லோ II)



கையெழுத்திட்டன. ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனத்தில் 22 சதவிகிதம் மட்டுமே கணக்கில் கொள்ளப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறினால், பலஸ்தீனர்களுக்கு அவர்களின் சொந்த நிலத்தில் கால் பங்குக்கும் குறைவான அளவுதான் கொடுக்கப்பட்டுள்ளது.

இடைக்கால ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, மேற்கு கரை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது:

பகுதி ஒன்று – இது பலஸ்தீனத்தின் முழுமையான நிர்வாக மற்றும் பாதுகாப்புக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. மேற்கு கரையின் சுமார் 18 சதவிகிதப் பகுதி அல்லது வரலாற்று ரீதியான பலஸ்தீன நிலப்பரப்பில் 3.96 சதவிகித நிலத்தில் உள்ளது.

**பேராசிரியர் விஜய் பிரசாத்**

பகுதி இரண்டு – இது பலஸ்தீன அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என சொன்னாலும் உண்மையில் இஸ்ரேலின் பாதுகாப்புக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது மேற்கு கரையின் சுமார் 22 சதவிகிதப் பகுதியை உள்ளடக்கியது.

பகுதி மூன்று – இது முழுவதுமாக இஸ்ரேலால் கட்டுப்படுத்தப்படுகிறது. மேற்கு கரையின் 60 சத விகிதத்துக்கும் அதிகமான பகுதியை உள்ளடக்கியது. உண்மையில், ஓஸ்லோ II ஒப்பந்தம், கிழக்கு ஜெருசலேமின் இணைப்பு மற்றும் காஸாவின் ஆக்கிரமிப்புக்குப் பிறகு இஸ்ரேல் வரலாற்று ரீதியிலான பலஸ்தீனத்தின் 97 சதவிகிதத்தை ஆக்கிரமித்துக் கட்டுப்படுத்துகிறது.

### மேற்கு கரையில் பலஸ்தீனர்களை மூச்சுத் திணற வைப்பது

மேற்கு கரையில் இஸ்ரேலின் செயல்பாடுகள் பலஸ்தீனர்களின் வாழ்க்கையை மிக மோசமாக அழித்துள்ளது. 2023 ஒக்ரோபருக்கு முன் இஸ்ரேல், ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு கரைப் பகுதியில் 590 சாலைத் தடுப்புகள் மற்றும் சோதனைச் சாவடிகளை வைத்திருந்தது. ஒக்ரோபர் ஹமாஸ் தாக்குதலுக்குப் பின்னர் சோதனைச் சாவடிகளை 900 ஆக அதிகரித்து பலஸ்தீனர்கள் வெளியில் நடமாடுவதையே முற்றிலும் நிறுத்தியது. விவசாய உற்பத்திக்குத் தேவையான ஆழ்துளைக் கிணறுகள், நிலம், குடிநீர் ஆகிய எதையுமே பயன்படுத்த முடியாத – வாங்க முடியாத நிலைக்கு பலஸ்தீனர்கள் தள்ளப்பட்டனர். பலஸ்தீனர்களின் அடிப்படைக் கல்வி, சுகாதாரம், மற்றும் வேலைவாய்ப்பு சேவைகள் அனைத்தையும் இஸ்ரேல் தடுத்துவிட்டது.

### இடப்பெயர்வு மற்றும் பறிமுதல்

இஸ்ரேல் இராணுவம் மேற்கு கரையில் இன அழிப்பைச் செய்து வருகிறது. பலஸ்தீனர்களைச் சுடுவது, இனவெறித் தாக்குதல்கள், பலஸ்தீனப் பெண்கள் மீது பாலியல் வன்முறை, பலஸ்தீனர்களின் வீடுகள் மற்றும் விவசாய நிலங்களை அழித்து அதில் இருந்த பலஸ்தீன மக்களை வெளியே

துரத்தி வருகிறது.

2025 ஜனவரி மாதம் பாதுகாப்பு ஒத்திகை என்ற பெயரில் தேடுதல் வேட்டை என்று கூறி இனப்படு கொலைகளை இஸ்ரேல் தீவிரப்படுத்தியது. இந்தச் செயலின் அடிப்படையில் இஸ்ரேல் இராணுவம் ஜெனின் அகதிகள் முகாமில் இருந்து 3,840 குடும்பங்கள், நூர் ஷம்ஸ் அகதிகள் முகாமில் 1,910 குடும்பங்கள், துல்கரம் அகதிகள் முகாமில் 2,505 குடும்பங்கள் என சுமார் 8,255 பலஸ்தீன குடும்பங்களைத் துரத்தியது. இந்தக் குடும்பங்கள் அனைத்தும் 1948 நக்பாவின்போது தங்கள் வீடுகளிலிருந்து துரத்தப்பட்ட பலஸ்தீனர்களின் நேரடி வாரிசுகள் ஆவர். 2023 ஒக்ரோபர் முதல் 2025 ஏப்ரல் வரை மேற்கு கரையில் 3,500 இற்கும் மேற்பட்ட கட்டப்பட்ட வீடுகள், கால்நடைப் பராமரிப்பு இடங்கள் மற்றும் குடிதண்ணீர் தொட்டிகள், நீர் தேக்கங்கள் உள்ளிட்ட கட்டமைப்புகளை இஸ்ரேலிய இராணுவத்தினர் அழித்தனர்.

**மரணம், கைது மற்றும் சித்திரவதை**

2023 ஒக்ரோபர் முதல், இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு இராணுவம் மேற்கு கரையில் 190 குழந்தைகள் உட்பட சுமார் 900 பலஸ்தீனர்களைப் படுகொலை செய்துள்ளது. அவர்களின் தாக்குதலால் 8,400 பேர் படுகாயமடைந்துள்ளனர். 2023 பிற்பகுதியிலிருந்து, இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு இராணுவம் 15,000 பலஸ்தீனர்களைக் கைது செய்துள்ளது, பலர் 'நிர்வாகத் தடுப்பு' என்ற சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டே இன்றிக் கைது செய்து அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். 2023 ஒக்ரோபர் 7 முதல், இஸ்ரேலின் சிறைகள், தடுப்பு மையங்கள் மற்றும் முகாம்களில் 65 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. ஆண், பெண், குழந்தைகள் என அனைத்துப் பலஸ்தீனர்கள் மீதான பாலியல் வன்முறைகள் இந்த முகாம்களில் வழக்கமாக நடைபெறுகிறது.

**கவிதையின் குரல்**

ஃபத்வா ஹாஃபெஸ் துகான் (Fadwa Hafez Tuqan) 1917 இல் பலஸ்தீன நகரமான நாப்லசில் (Nablus) பிறந்தார். அவர் 2003 இல் இறந்தபோது அவரது நகரம், ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு கரையின் ஒரு பகுதியாக இஸ்ரேல் இராணுவ ஆட்சியின் கீழ் இருந்தது. கவிஞர் மஹ்மூத் தார்விஷ் (Mahmoud Darwish) அவருக்காக எழுதிய இரங்கல் உரையில், 'பேரழிவு காலத்தில் கவிஞர் என்ன செய்கிறார்?' என கேட்டார். 'திடீரென, கவிஞர் தன்னை விட்டு வெளியே வரவேண்டும், கவிதையே சாட்சியாக இருக்கிறது'. அவரது மிகவும் கொண்டாடப்பட்ட கவிதைகளில் ஒன்று 'கடற்பறவை மற்றும் மறுப்பிற்கு மறுப்பு' ஆகும்:

"பறவையே, என் கடற்பறவையே,
இப்போது அறிந்தேன்
கடுமையான நேரங்களில், மௌனச் சுரங்கத்தில் நின்று,
எல்லாம் மாறும்.
இறந்தவர் இதயத்திலும் விதைகள் முளைக்கும்,
காலை இருளிலிருந்து வெடிக்கும்.
ஏனென்றால் இப்போது அறிந்தேன்
ஏதோ நடந்தது...
அடிவானம் பிளந்தது,
வீடு பகல் ஒளியை வரவேற்றது."

# பட்டலந்த அறிக்கையின் மறுபக்கம்!

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை (Batalanda Commission Report) ஜே.வி.பியின் குற்றங்களையும் அம்பலப்படுத்துகிறது. ஜே.வி.பி. நூற்றுக்கணக்கான அரசியல் படுகொலைகளைச் செய்துள்ளது.

அத்துடன் பெருந்தொகையான வங்கிக் கொள்ளைகள், கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான அரச சொத்துகள் சேதம், விவசாய சேவை நிலையங்கள் சேதப்படுத்தல், தேயிலைத் தொழிற்சாலைகளைச் சேதப்படுத்தல், நெல் சந்தைப்படுத்தும் களஞ்சிய சாலைகளைச் சேதப்படுத்தல், பஸ்கள், புகையிரதங்கள், மின்சாரம் கடத்தும் நிலையங்கள் என்பனவற்றைச் சேதப்படுத்தல் என்பனவற்றையும் ஆயுத முனையில் செய்ததுடன், இராணுவ முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களைத் தாக்கி ஏராளமான ஆயுதங்களையும் கொள்ளையடித்துள்ளனர். அவை பெரும்பாலும் இன்னமும் மீட்கப்படவில்லை.

ஜே.வி.பி. இவற்றையெல்லாம் இலங்கையை அழிக்க வந்த இந்தியா என்ற பிசாசு (Evil) மற்றும் இராட்சத ஒக்டோபஸ் (Giant Octopus) என்பனவற்றுக்கெதிராகவே செய்வதாகச் சொல்லியது. ஜே.வி.பியின் இந்தச் செய்கைகள் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் சேதம் விளைவித்ததால், நிபந்தனையற்ற விதத்தில் பேச்சுவார்த்தை நடத்த முன்வரும்படி அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அழைப்பு விடுத்தார். இன்றோ, ஜே.வி.பி. தலைவர்கள் இந்தியத் தலைவர்களின் கரங்களை முத்தமிடுவதுடன், அந்த பிசாசும் பெரும் ஒக்ரோபஸ்சுமான இந்தியாவுடன் இரகசியமாக புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுகின்றனர்.

1980களின் பிற்பகுதியில் ஜே.வி.பியின் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் அனைவரும் தமது நடவடிக்கைகளுக்காகப் பொறுப்புக்கூற வேண்டும் என ஜே.வி.பியின் முன்னைநாள் பொதுச்செயலாளரும், ஜனாதிபதி வேட்பாளருமான நந்தன குணதிலக (Nandana Gunathilake) சரியாகவே குறிப்பிட்டிருக்கிறார். நீதி நிச்சயமாக பாரபட்சமாக இருக்கக்கூடாது. பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் அளவு கணக்கில்லாத முறையில் கண்மூடித்தனமான பயங்கரவாதத்தையும், கொடூரமான குற்றங்களையும் இழைத்து நாட்டை இரத்தப் பாதையில் கொண்டு சென்ற இருதரப்பும் நிச்சயமாக சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

– 'த ஐலண்ட்' – ஏப்ரல். 12

**4ம் பக்கத்தொடர்ச்சி...**

ஈரான் வரலாற்றைப் பற்றி அறிந்த புத்திசாலிகள் ஈரானுடன் ஒருபோதும் அச்சுறுத்தும் மொழியில் பேசமாட்டார்கள். ஏனெனில் ஈரான் ஒருபோதும் சரணடையாது. இந்தப் போரில் அமெரிக்கா தலையிட்டால் அதன் விளைவு ஈடு செய்ய முடியாததாக இருக்கும்.

சியோனிஸ்ட் (இஸ்ரேல்) அரசு மிகப்பெரிய தவறு செய்து விட்டது. அதற்காக உரிய தண்டனையை கொடுப்போம். நமது மக்கள் தங்கள் தியாகிகளின் இரத்தத்தை விட்டுவிட மாட்டார்கள். தங்கள் வான்வெளியை மீறுவதை அனுமதிக்க மாட்டார்கள்.

நமது இராணுவ வீரர்கள் நாட்டை பாதுகாக்க தயாராக உள்ளனர். சியோனிஸ, தீவிரவாத ஆட்சியாளர்களுக்கு கடுமையான பதிலடி கொடுக்க வேண்டும். அவர்களுக்கு கருணை காட்டக் கூடாது.'
இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி தேர்தல் பற்றிய ஒரு கண்ணோட்டம்



மே 6 இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி – ஜே.வி.பி இணைந்த அரசாங்கம் கடுமையான பின்னடைவைச் சந்தித்துள்ளது.

ஆனால் தேர்தல் நடத்தப்பட்ட சபைகளில் பெரும்பான்மையானவற்றில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றதால், தமக்குப் பின்னடைவு என்ற கருத்தை அவர்கள் நிராகரிக்கின்றனர்.

மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் என 339 சபைகளுக்கு நடத்தப்பட்ட தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி 266 சபைகளில் வெற்றி பெற்றது உண்மையே. ஆனால், கடந்த நொவம்பரில் நாடாளுமன்றத்துக்கு நடத்தப்பட்ட தேர்தலுடன் ஒப்பிடுகையில், உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் தேசிய மக்கள் சக்திக்கு பின்னடைவு என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஜே.வி.பின் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்தால், 2019 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. சார்பாகப் போட்டியிட்ட அநுரகுமார திசாநாயக்க 3.16 சத வீத வாக்குகளை மட்டுமே பெற்றார்.

2024 ஜனாதிபதி தேர்தலில் நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி காரணமாக ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக ஏற்பட்ட போராட்டங்களைப் பயன்படுத்தி அநுரகுமார திசாநாயக்க ஒரு ஆதிக்க சக்தியாக உருவெடுத்தார். அவருடைய வெற்றியை பல கருத்துக் கணிப்புகள் முன்கூட்டியே தெரிவித்திருந்தன. அவர் 42.31 வீத வாக்குகள் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவானார்.

இலங்கை அரசியல் அமைப்பின் பிரகாரம் ஒருவர் 43 வீதம் வாக்குகள் பெற்று ஜனாதிபதியாக வர முடியாது. வெற்றி பெறுபவர் 50 வீதத்துக்குக் குறையாத வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும். எனவே விருப்பு வாக்குகளை எண்ண வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார். திசாநாயக்க பெரும்பான்மையுடன் வெற்றி பெறாததால், அவரை நான் “சிறுபான்மை ஜனாதிபதி” என்றே குறிப்பிட்டேன்.

***பேராசிரியர் எஸ்.ஐ. கீதபொன்கலன்***

இலங்கை ஜனாதிபதிகள் பெரும்பாலும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, புதிய நாடாளுமன்றத் தேர்தலுக்கு அழைப்பு விடுவது வழமை. ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வெற்றியை நாடாளுமன்றத் தேர்தலிலும் பெறுவதே இதன் நோக்கம்.

உதாரணமாக, மகிந்த ராஜபக்ச 2010 ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, ஏப்ரலில் நாடாளுமன்றத் தேர்தலுக்குச் சென்று வெற்றி பெற்றார். திசாநாயக்கவும் மகிந்தவின் அதே உத்தியையே பயன்படுத்தி உள்ளார்.

திசாநாயக்க 2024 செப்ரெம்பர் 23 இல் ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அடுத்த நாள், செப்ரெம்பர் 24ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்தார். நாடாளுமன்றத் தேர்தல் நொவம்பர் 14 அன்று நடைபெற்றது. இரண்டு மாதங்களில் வாக்காளர்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. அதனால் எளிதாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் திசாநாயக்கவால் வெற்றிபெற முடிந்தது.

உண்மையில் இந்த இரண்டு மாதங்களில் நாட்டில் நிகழ்ந்த அரசியல் போக்குகள் தேசிய மக்கள் சக்தியின் வாக்குகளைக் குறைத்திருக்க வேண்டும். ஏனெனில், தேர்தல் காலங்களில் திசாநாயக்க கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றுவதற்கு அவர் முயற்சிக்கவில்லை. தனது எதிரியான முன்னைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளையே அவர் அப்படியே பின்பற்றினார்.

இன்னொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். இந்தக் காலகட்டத்தில் இஸ்ரேலியர்கள் இலங்கையில் தமது கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புகிறார்கள் என்ற செய்தி பரவிக் கொண்டிருந்தது. அரசாங்கம் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, இஸ்ரேலியர்களின் கட்டமைப்புகளுக்குப் பாதுகாப்பை வழங்கியது. இது ஜனாதிபதி தேர்தலில் திசாநாயக்கவை ஆதரித்த கணிசமான முஸ்லீம்கள் மனதில் கோபத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை.

பதிலாக தேசிய மக்கள் சக்தியின் ஆதரவு மேலும் பெருகி நாடாளுமன்றத் தேர்தலில் அது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முடிந்தது. இதை நான் “அமைதியான சதி” என எனது இணையத்தளத்தில் (http://thediplomat.com/2024/11professor-keethaponcalan-on-sri-lankas-new-government/) குறிப்பிட்டேன். இந்த வெற்றி கிடைத்ததால்தான் அரசாங்கம் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு நம்பிக்கையுடன் சென்றது.

உள்ளூராட்சித் தேர்தலில் பெரும்பாலான

சபைகளில் ஆளும் கட்சி வெற்றி பெற்ற போதிலும், முடிவுகள் அரசாங்கத்துக்கு ஏமாற்றமளிப்பதாக அமைந்துவிட்டது. ஏனெனில் ஏறத்தாழ மூன்றிலொரு சபைகளில் ஆளும் கட்சியை விட ஒருங்கிணைந்த எதிர்க்கட்சிகள் அதிக இடங்களை வென்றுள்ளன. இந்த நிலைமை உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகளில் தடங்கல்களை ஏற்படுத்தி மக்களின் அதிருப்தியை சம்பாதிக்கக்கூடும்.

கொழும்பு மாநகர சபை இதற்கொரு உதாரணம். அரசாங்க கட்சியான தேசிய மக்கள் சக்தி 117 பேர் கொண்ட கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்கத் தேவையான உறுப்பினர்களைப் பெறாது 48 உறுப்பினர்களையே பெற்றது. அதேநேரத்தில் எதிர்க்கட்சிகளும் சுயேட்சைகளும் இணைந்து 69 உறுப்பினர்களைப் பெற்றுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தலை ஒரு கருத்துக் கணிப்பாக எடுத்தால், தேசிய மக்கள் சக்திக்கு பேரழிவு ஏற்பட்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். ஏனெனில், தேசிய மக்கள் சக்தி 43.26 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றது. அதேநேரத்தில் எதிர்க்கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகள் தேசிய மக்கள் சக்தி பெற்றதைவிட அதிகமானதாகும்.

தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளில் 2.03 மில்லியன் வாக்குகளை உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் இழந்துள்ளது. மொத்தமாக 8,793 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 3,927 உறுப்பினர்களை மட்டுமே வென்றுள்ளது. இது 50 சத வீதத்துக்கும் குறைவானதாகும்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளில் குறிப்பிடக்கூடிய இன்னொரு அம்சம், சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் மீட்சியாகும். கோத்தபாய ராஜபக்ச அரகலய போராட்டத்தின் மூலம் ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டதோடு பொதுஜன பெரமுனவின் கதை முடிந்து விட்டதாகவே எல்லோரும் நம்பினர்.

அதன் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் சார்பாகப் போட்டியிட்ட நாமல் ராஜபக்ச 2.57 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றார். பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன 3.14 சதவீத வாக்குகளைத்தான் பெற்றது. ஆனால் உள்ளூராட்சித் தேர்தலில் அது 9.17 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது. அந்தக் கட்சியைப் பொறுத்தவரை இது குறிப்பிடத் தக்கதொரு சாதனையும் மீட்சியுமாகும்.

இந்த மாற்றத்தை நான் பின்வருமாறு பார்க்கின்றேன். பொருளாதார நெருக்கடி காரணமாக பொதுஜன பெரமுனவுக்கு இருந்த சிங்கள தேசியவாத வாக்குகள் தேசிய மக்கள் சக்திக்குச் சென்றன. ஆனால், கோத்தபாய காலத்தில் ஏற்பட்ட பொருளாதாரச் சிரமங்களை அவர்கள் இப்பொழுது மறக்கத் தொடங்கியுள்ளார்கள் போலத் தோன்றுகிறது.

ஏனெனில், தேசிய மக்கள் சக்தி கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததால், அந்த வாக்காளர்கள் 'வீடு திரும்ப' தொடங்கியுள்ளதையே பொதுஜன பெரமுனவின் வாக்கு வீத அதிகரிப்பு காட்டுகிறது. இந்த வீடு திரும்புதல் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தேனிலவு ஏன் இவ்வளவு சீக்கிரம் முடிவுக்கு வந்தது? பலர் பல காரணங்களைக் கூறியுள்ளனர். அரசாங்கத்தின் பொய் வாக்குறுதிகள், இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் என பல விடயங்கள் அதில் அடங்குகின்றன.

பல காரணிகளின் திரட்சியின் விளைவாகவே தேசிய மக்கள் சக்திக்கு இந்தப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என நான் கருதுகிறேன்.

பொதுவாக சில காரணிகள் தேர்தல் வெற்றிகளுக்கு உதவுகின்றன. உதாரணமாக, ஈஸ்டர் ஞாயிறு கொலைகள் கோத்தபாய ராஜபக்ச 2019 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற உதவியது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி 2024 ஜனாதிபதித் தேர்தலில் திசாநாயக்க வெற்றிபெற உதவியது.

அரசாங்கத்தின் மீதான மக்களின் அதிருப்திக்கு சில உதாரணங்களைக் கூறலாம்.

1. வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு மக்கள் அரசாங்கத்திடமிருந்து நிவாரணத்தை எதிர்பார்த்தனர். ஆனால் வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட நிராணங்கள் ஏமாற்றமளிப்பதாக இருந்தது.

2. அரசாங்கம் "சுத்தமான இலங்கை" திட்டத்தின் கீழ் தனியார் பேருந்துகளை "சுத்தம்" செய்யப் புறப்பட்டது. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அடித்தட்டு மக்கள் தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்கள். அரசாங்கம் அந்த மக்களின் தொழிலில் கை வைத்ததால் அவர்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டது. அதனால் அந்தத் திட்டத்தை ஒத்தி வைக்க வேண்டி ஏற்பட்டது.

3. . அரசாங்கத்தின் தவறான நிர்வாகத்தால் அரிசி, தேங்காய், உப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தாறுமாறாக அதிகரித்து மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துள்ளது.

4. ஈஸ்டர் ஞாயிறு படுகொலைக்குக் காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்துவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்தது. ஆனால் அது சம்பந்தமாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது போன்ற இன்னும் பல பிரச்சினைகள் உள்ளன. அரசாங்கம் இந்த உண்மையை உணர்ந்து, அதற்கான தீர்வுகளுக்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இல்லையெனில், எதிர்காலத் தேர்தல்கள் ஆளும் கட்சிக்கு இருள் சூழ்ந்ததாக அமையலாம். அதற்கான சமிக்ஞையையே உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் காட்டியுள்ளன.

(கலாநிதி எஸ்.ஜ. கீதபொன்கலன் அமெரிக்காவின் மேரிலாந்து சாலிஸ்பரி பல்கலைக்கழகத்தில் மோதல் தீர்வுகள் சம்பந்தமான பேராசிரியராக இருக்கிறார். முன்னர் அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரசறிவியல்துறைப் பேராசிரியராக இருந்துள்ளார். 'கொழும்பு ரெலிகிறாப்' (Colombo Telegraph) இணையத்தளத்தளத்தில் வந்த அவரது கட்டுரையின் சாராம்சம் இது)

**14ம் பக்கத்தொடர்ச்சி...**

வறுமை, வேலையின்மை அதிகரித்துள்ளது. ஆனால் ஏகாதிபத்திய மற்றும் இனவெறி அரசுகளின் போர்வெறியால் உலக மக்கள் அனைவரும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் துணையோடு இஸ்ரேலின், போர்வெறி நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்தியா உட்பட அனைத்து நாடுகளும் குரல் கொடுக்க வேண்டும். இந்தப் பூவுலகை அழிக்க யாருக்கும் உரிமையில்லை.

**–தீக்கதிர் ஆசிரியர் தலையங்கம்**

# ஏழை நாடுகள் மீது சீனாவின் 'கடன் பொறி' என்ற மேற்கத்திய பிரச்சாரம் உண்மையானதா?

சீனாவின் சின்குவா (Xinhua) செய்தி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரையின் சுருக்கம் இது:

உண்மையில் உலகக் கடனில் பெரும்பகுதி மேற்கத்தைய கடன் நிறுவனங்களுக்கு உரியதாகும்.

உலக வங்கி தரவுகளின்படி, ஆபிரிக்காவுக்கான சீனாவின் கடன் தொகை மொத்தமாக 11 சத வீதம் மட்டுமே.

சீனாவின் கடன்கள் குறைந்தளவு வட்டி வீதங்களைக் கொண்டவையாகவும், திருப்பிச் செலுத்துவதற்கு நீண்டகால தவணை வசதி உள்ளதாகவும் இருக்கின்றது.


அத்துடன் சீனாவின் கடன்கள் மேற்கத்தைய கடன் வழங்கும் நிறுவனங்கள் விதிப்பது போன்ற மக்களைப் பாதிக்கும் தனியார்மயமாக்கல், தாராளமயமாக்கல் போன்ற நிபந்தனைகளை கடன் பெறும் நாடுகள் மீது விதிப்பதில்லை.

கடன் சேவையை இடை நிறுத்தும் முயற்சியில் பங்கேற்ற 46 நாடுகளில் சீன கடன் வழங்குநர்கள் 30 வீதத்தைக் கொண்டிருந்தனர். கடன் குறைப்பு நடவடிக்கைகளில் 47 நாடுகளின் பங்களிப்பை விட சீனாவின் பங்களிப்பு இரண்டு மடங்காகும்.

சீனாவின் கடன்கள் பொதுவாக உள்கட்டமைப்பு, தொலைத்தொடர்பு சேவைகள், பசுமை எரிசக்தி ஆகிய துறைகளுக்கே வழங்கப்படுகின்றன. அதன் காரணமாக வறுமையான நிலையில் இருக்கும் நாடுகள் வளர்ச்சி பெறவும், தமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வாய்ப்பாகிறது.

‘சீனக் கடன்பொறி’ என்ற மேற்கு நாடுகளின் பிரச்சாரம், சீனா தெற்கு நாடுகளுடன் கொண்டிருக்கும் சர்வ வியாபகமான உறவுகளை சீர்கலைப்பதற்கான ஒரு திட்டமிட்ட முயற்சியாகும் என சீன ஆய்வாளர்கள் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேற்கத்தைய நாடுகளில் உள்ள ‘சிந்தனைக் குழாம்’ என்ற பெயரிலான அமைப்புகள், சீனா வளர்முக நாடுகளை கடன்கள் மூலம் அழுத்தத்திற்கு உள்ளாக்குகின்றது என இடையறாது பிரச்சாரம் செய்கின்றன. ஆனால் உண்மை என்ன?




வளரும் நாடுகளுக்கான கடன்களில் பெரும்பகுதி மேற்கத்தைய நிதி நிறுவனங்களாலேயே – அதுவும் அதிக வட்டிக்கு – வழங்கப்பட்டுள்ளன.

உதாரணமாக, ஆபிரிக்க நாடுகளின் மொத்த கடன்களில் 66 சத வீதம் மேற்கத்தைய தனியார் கடன் நிறுவனங்களால் வழங்கப்பட்டவையாகும். ஆனால் சீனா வழங்கிய மொத்த கடன் 11 வீதம் மட்டுமே! இந்த உண்மை உலக வங்கி வெளியிட்ட அறிக்கையில் இடம் பெற்றுள்ளது. அப்படியிருக்க, சீனா எவ்வாறு ஆபிரிக்க நாடுகளை கடன்பொறியில் வீழ்த்தியிருக்க முடியும்?

இலங்கையைப் பொறுத்தவரை, அதன் மொத்த கடனில் சீனாவின் பங்கு 10.8 வீதம் மட்டுமே. அதேநேரத்தில், இலங்கையின் கடனில் 84.2 வீதத்தை தனியார் நிறுவனங்களே வழங்கியுள்ளன என்பதை இலங்கை மத்திய வங்கி 2023 மார்ச்சில் வெளியிட்ட அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

பாகிஸ்தானின் பொருளாதார நெருக்கடிக்கு சீனக் கடன்கள்தான் காரணம் என்ற குற்றச்சாட்டை ‘நியுயோர்க் ரைம்ஸ்’ பத்திரிகை முன்வைத்தது. இதை மறுத்த பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மும்தாஜ் பலோச், சீன – பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் (China - Pakistan Economic Coridor) பாகிஸ்தானின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

கடன்களை திருப்பிச் செலுத்தத் தவறுதல் அல்லது தாமதமாகுதல் சம்பந்தமான கவலைகள் உலக ரீதியாக அதிகரித்து வருகின்ற சூழலில் சீனா, இருதரப்பு உறவுகளில் சமத்துவக் கொள்கையைக் கடைப்பிடிப்பதுடன், முன்கூட்டிய நியாயமான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடுகின்றது.

சீனா வழங்கும் கடன்கள் குறித்து மேற்கத்தைய பிரச்சாரகர்கள் தொடர்ந்து பொய்களைக் கட்டவிழ்த்து வருகின்ற போதிலும், பலர் உண்மை நிலவரத்தை பகுப்பாய்வின் மூலம் கண்டு வருகின்றனர்.

சீனாவின் நிதியுதவி இலத்தீன் அமெரிக்க நாடுகள், கரீபியன் நாடுகள் உட்பட வளரும் நாடுகளின் உள்கட்டமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், தன்னிறைவை ஏற்படுத்துவதிலும் பெரும் பங்களிப்பைச் செலுத்தியுள்ளது என பிரேசில் பொருளாதார ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த பெட்ரோ பாரோஸ் (Pedro Barros) கூறியுள்ளார்.

உதாரணமாக, ஒரு காலத்தில் இறக்குமதி மின்சாரத்தை நம்பியிருந்த ஈகுவடோர் (Ecuador) நாடு, சீனாவின் உதவியுடன் ஒரு தொகை நீர்மின் நிலையங்களைக் கட்டியதன் மூலம் மின்சாரத் தேவையில் கணிசமான ஒரு பகுதியைப் பூர்த்தி செய்துள்ளது.

இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் நாடுகளில் சீன உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் காரணமாக 777,000 பேர் வரையானோருக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளதாக 'கரீபியன் நெற்வேர்க்'கின் (Caribbean Network) அறிக்கை குறிப்பிடுகிறது.

பசுமை எரிசக்தி உற்பத்தியில் ஆபிரிக்காவின் பங்காளியாக இருக்கும் சீனாவின் உதவி மூலம் ஆபிரிக்க மக்களுக்கு நீடித்த மற்றும் மலிவான எரிசக்தி கிடைக்கிறது என, கென்யாவைச் சேர்ந்த சர்வதேச விவகார அறிஞர் அடிரா கெவின்ஸ் (Adira Kevins) கூறுகிறார். அதேவேளையில், மேற்கத்தைய நாடுகள் வழங்கும் உதவிகள் சிக்கன நடவடிக்கைகள், தனியார்மயமாக்கல், 'ஜனநாயக மேம்பாடு' போன்ற நிபந்தனைகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது என அவர் கூறுகிறார்.

ஆபிரிக்காவில் வளர்ந்து வரும் சீனாவின் செல்வாக்கை சீர்குலைப்பதும், தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதுமே மேற்கத்தைய நாடுகளின் சீனாவுக்கு எதிரான 'கடன்பொறி' பிரச்சாரத்தின் நோக்கம் என, தன்சானியாவில் உள்ள டார் எஸ் சலாம் பல்கலைக்கழகத்தின் (University of Dar es Salaam) சீன ஆய்வு மைய இயக்குநர் பேராசிரியர் ஹம்ப்ரி மோஸி (Humphrey Moshi) குறிப்பிட்டிருக்கிறார்.

சீனா வளர்முக நாடுகளுக்கு வழங்கி வரும் உதவிகள் குறித்து மேற்கத்தைய முதலாளித்துவப் பிரச்சாரகர்கள் பல பொய்யான அவதூறுகளைப் பரப்பினாலும், சீனாவின் உதவியைப் பெறும் நாடுகள் சீன உதவிகள் பற்றி எவ்வித குற்றச்சாட்டுகளையும் இதுவரை முன்வைக்கவில்லை என்பது முக்கியமான ஒரு விடயமாகும்.

மாறாக, மேலும் மேலும் பல நாடுகள் சீனாவின் தடம் மற்றும் வழி முயற்சியில் (Belt and Road Initiate - BRI) சேர்ந்து பயன் பெறுவதில் ஆர்வம் காட்டி வருகின்றன.


# ஏ.ஐ - பொதுச் சொத்தாக மாறுவதே தீர்வு

**தொ**ழில்நுட்ப வளர்ச்சியின் அடிப்படை நோக்கம் என்னவாக இருக்க வேண்டும்? மனித குல முன்னேற்றமா அல்லது ஒரு சிலரின் இலாபமா? இந்தக் கேள்வி இன்று செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் பின்னணியில் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

ஏ.ஐ தொழில் நுட்ப மாற்றத்தால் 2024– 25 ஆம் நிதியாண்டில்மட்டும் 14 சதவிகிதம் பணியாளர்கள் வேலையிழந்துள்ளனர் என்கின்றன புள்ளிவிபரங்கள். உலகளவில் 2025 இற்குள் ஏ.ஐ காரணமாக 75 முதல் 85 மில்லியன் (7.5–8.5 கோடி) வேலையிழப்புகள் ஏற்படும் என உலக பொருளாதார மன்றம், நெக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம் (Nexford University) ஆகியவை கணித்துள்ளன.

ஏ.ஐ தொழில்நுட்பம் என்பது இன்று இரு வேறு பாதைகளில் பயணிக்கிறது. ஒன்று மனித நலனுக்காகவும், மற்றொன்று வணிக இலாபத்திற்காகவும். இந்த இரு அணுகுமுறைகளும் முற்றிலும் வேறுபட்ட விளைவுகளை உருவாக்குகின்றன.

சோசலிச நாடுகளில் ஏ.ஐ தொழில்நுட்பம் சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக திட்டமிட்டு பயன்படுத்தப்படுகிறது. கல்வி, சுகாதாரம், பொதுப் பணிகள்,




விவசாயம் போன்ற துறைகளில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இதன் முக்கிய நோக்கம். இங்கே தொழில்நுட்பம் சமூகத்தின் சொத்து என்ற அடிப்படையில் அணுகப்படுகிறது. தொழில்நுட்ப வளர்ச்சியின் பலன்கள் சமூகம் முழுவதும் பரவும் வகையில் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. இங்கு தொழில்நுட்பம் உழைக்கும் மக்களின் விடுதலைக்கான கருவியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

மறுபுறம், முதலாளித்துவ நாடுகளில் ஏ.ஐ தொழில்நுட்பம் முழுமையாக பெருநிறுவனங்களின் கைகளில் குவிந்துள்ளது. இங்கே தொழில்நுட்பத்தின் முதன்மை நோக்கம் இலாப அதிகரிப்பு மட்டுமே. இந்த அணுகுமுறை பல்வேறு சமூக பிரச்சனைகளை உருவாக்குகிறது. குறிப்பாக அமெரிக்காவில் கூகிள், அமஸொன், மைக்ரோசொஃப்ட், மெட்டா (Google, Amazon, Microsoft, Meta) போன்ற நிறுவனங்கள் தங்களின் இலாப அதிகரிப்பிற்காக மட்டுமே, இந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்துகின்றன. இந்த கோர்ப்பரேட் ஏகாதிபத்தியம் உழைக்கும் மக்களின் அறிவையும் தரவையும் கூட சுரண்டுகிறது.

லெனின் கூறியபடி, ஒரு "புரட்சிகர நிலைமை என்பது ஆளும் வர்க்கங்கள் பழைய விதத்தில் ஆட்சி செய்ய முடியாத நிலையும், அடிமைப்படுத்தப்பட்ட வர்க்கங்கள் பழைய விதத்தில் வாழ முடியாத நிலையும் ஆகும்." ஏ.ஐ எனும் நவீன தொழில் நுட்பப் புரட்சியும் இந்த நிலையை நோக்கி நம்மை நகர்த்துகிறது. ஏஐ மூலம் உற்பத்தித்திறன் அதிகரிக்கும் போது, தொழிலாளர்கள் வேலையிழக்கின்றனர். இதனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாங்கக்கூடிய நுகர்வோர் இல்லாத நிலை ஏற்படுகிறது. இது முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாட்டை கூர்மையாக்குகிறது.

வேலையின்மை மற்றும் அதிகரித்த ஏற்றத்தாழ்வு சமூக பதற்றத்தையும், அமைதியின்மையையும் தூண்டும். தொழில்நுட்பம் சிலரின் தனிச் சொத்தாக இல்லாமல், சமூகத்தின் பொதுச்சொத்தாக மாற்றப்பட வேண்டும். அதுவே எதிர்கால அமைதிக்கு வழிவகுக்கும்.

**நன்றி: தீக்கதிர்**

# குடியரசு தினத்தை ஏன் கொண்டாடக்கூடாது?



கடந்த மே மாதம் 22 ஆம் திகதி, இலங்கை குடியரசின் 53 ஆவது ஆண்டு நிறைவு தினமாகும். இத்தினம் இலங்கையில் ஒரு தேசிய விடுமுறை தினமல்ல. இலங்கை அரசு இதனைக் கொண்டாடுவதில்லையென முடிவு செய்துள்ளது. இதற்குப் பதிலாக, இலங்கை ஒரு முடியரசுக் குடியேற்ற நாடாக இருந்து, பிரித்தானிய மன்னரின் கருணையினால் பிரித்தானியாவின் மேலாட்சிக்குட்பட்ட தன்னாட்சியுரிமை கொண்டதொரு நாடாக மாறிய நாளான பெப்ரவரி 4 ஆம் திகதியை கௌரவிக்க அரசு விரும்புகின்றது. இரண்டாம் உலகப் போரின் மத்தியில் இலங்கையின் தன்னாட்சி அந்தஸ்தைப் பெறுவதில் வெற்றி கண்ட டி.எஸ்.சேனநாயக்க மற்றும் சேர் ஒலிவர் குணதிலக ஆகியோரின் முயற்சிகளை நான் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. மறுபுறம், நமது அண்டை நாடு (இந்தியா) ஓகஸ்ட் 15 ஐ சுதந்திர தினமாக அடையாளப்படுத்துகின்ற அதே வேளையில். அதன் குடியரசு தினத்தை ஜனவரி 26 ஆம் திகதி கண்கவர் கலாச்சார அணிவகுப்புகளுடன் கொண்டாடுகின்றது.

மே 12, 1946 அன்று, ஆறாம் ஜோர்ஜ் மன்னர், பக்கிங்ஹாம் அரண்மனையின் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஒரு கட்டளையின் மூலம், “இலங்கைத் தீவுக்கான” அரசியலமைப்பொன்றினை வழங்கியதுடன், “இலங்கை மக்களின் டொமினியன் (பிரித்தானியாவின் மேலாட்சிக்குட்பட்ட தன்னாட்சியுரிமை) அந்தஸ்தை நோக்கி முன்னேறுவதற்கான விருப்பத்துடன்”, அவரது அரசாங்கத்தின் “அனுதாபத்தினை” வெளிப்படுத்தினார். *1947*, டிசம்பர் *10* ஆம் திகதி பிரித்தானிய பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு மன்னரால் ஒப்புதலளிக்கப்பட்ட ஒரு மசோதா, “*1948* பெப்ரவரி *4* இலிருந்து ஐக்கிய இராச்சியத்திலுள்ள மாட்சிமை தங்கிய மன்னரின் அரசாங்கம் இலங்கை அரசாங்கம் தொடர்பில் எந்தப் பொறுப்பையும் கொண்டிருக்காது” எனவும், “பிரித்தானிய சாசனங்களில் ‘டொமினியன்’ வரைவிலக்கணத்தில் இலங்கை உள்ளடக்கப்படுதலும் வேண்டும்” எனவும் ஆணை வழங்கியது.

**கலாநிதி நிஹால் ஜயவிக்கிரம**

*1970* ஆம் ஆண்டு பொதுத் தேர்தலைத் தொடர்ந்து நடந்த நிகழ்வுகளுடன் இது (குடியரசுப் பிரகடனம்) வேறுபடுகின்றது. *1970* யூலை *19* ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் சபை (பாராளுமன்ற) உறுப்பினர்கள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அழைப்பின் பேரில் கொழும்பிலுள்ள நாவரங்கஹல என்ற நாடக மண்டபத்தில் கூடி, தம்மை அரசியலமைப்பு சபையாக பிரகடனப்படுத்திக் கொண்டனர். அடுத்து வந்த மாதங்களில், அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வாவின் வழிகாட்டலின் கீழ், அவர்கள் ஒரு புதிய அரசியலமைப்பை வரைவதற்கு நடவடிக்கை எடுத்தனர். *1972* மே *22* ஆம் திகதி, இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளை உள்ளடக்கிய பரந்துபட்ட பிரதிநிதிகள் அடங்கிய ஒன்றுகூடலின் முன்னிலையில், புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்வதும் சட்டமாக்குவதும் சான்றுப்படுத்தப்பட்டது. அத்துடன் சுயாதீன, இறைமையுள்ள மற்றும் சுதந்திர இலங்கை குடியரசு நடைமுறைக்கு வந்தது.

மே 22, *1972* அன்று நடந்தது தனித்தியங்குவதற்கான ஒரு செயல்முறையாகும். அன்றைய அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கொண்டிருந்தது. அந்தப் பெரும்பான்மையுடன், அரசாங்கம் வழமையான முறையில் சுமூகமாக செயற்பட்டு, *1946* அரசியலமைப்பை மாற்றி இலங்கையை ஒரு குடியரசாக அறிவித்து புதியதொரு அரசியலமைப்பைக் கொண்டு வந்திருக்க முடியும். ஆனால், புதிய அரசியலமைப்பை உருவாக்கியவரைப் பொறுத்தவரை, பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து *1946* ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட பேரவைக் கட்டளை மூலம் பிரித்தானிய முடியரசால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, பிரித்தானிய முடியரசுடனான தனது உறவுகளை முறித்துக் கொண்டு, டொமினியன் இலங்கை தன்னைத்தானே ஒரு குடியரசாக பிரகடனப்படுத்திக் கொள்வது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது. புதிய அரசியலமைப்பு ஆரம்பத்திலேயே பிரகடனப்படுத்தியது போல, “இறைமை” “மக்களிடமே” உள்ளது, அது பராதீனப்படுத்த முடியாதது. இறையாண்மை இனி ஒருபோதும் பிரித்தானிய முடியரசிடமிருந்து வரப்போவதில்லை. கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வாவின் பார்வையில், அடிப்படையில் ஒரு புரட்சிகர செயல்முறையின் ஊடாகவே, இலங்கை மக்கள் பிரித்தானிய முடியரசுடனான தமது தொடர்புகளை முற்றாக துண்டித்துக் கொள்ள வேண்டும்.

கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா சமரசமற்றவர். அவரது புரட்சிகரப் பயணத்திலிருந்து எதுவும் அவரைத் திசைதிருப்பாது. இது (குடியரசுப் பிரகடனம்) சொந்த மண்ணின் ஒரு துணிச்சலான, இலட்சியவாத, தனித்தியங்குவதற்கான உணர்ச்சி வயப்பட்ட செயல்முறையாகக் கூட இருந்தது. எதிர்க்கட்சித் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்த உற்சாகத்தை பகிர்ந்து கொண்டு, இவ்வாறு அவர் கருத்து தெரிவித்துள்ளார்:

“எனினும், வென்றவர்களும்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# மேற்கு ஆபிரிக்காவில் புதிய எழுச்சியின் துவக்கம்



பிரெஞ்சு மொழி பேசும் ஆபிரிக்க நாடுகள் முழுமையாக காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறவில்லை. முன்னாள் காலனி நாடுகளில் தனது சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக, பிரான்ஸ் அந்நாடுகளில் தனது இராணுவத்தை நிலைநிறுத்த வலியுறுத்தியது. அந்த காலனி நாடுகளும் இதற்கு ஒப்புக்கொண்டன. இது பிரான்சுக்கு தனது முன்னாள் காலனி நாடுகளின் அரசியலில் தலையிடுவதற்கு பெரும் வாய்ப்புகளை வழங்கியது.

**பிரான்சின் காலனித்துவக் கட்டுப்பாடு**

இந்தக் காலனி நாடுகள் பிரான்ஸ் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட 'சிஎப்ஏ ஃபிராங்க்' (CFA FRANC) என்ற நாணயத்தை ஏற்றுக்கொள்ள வைக்கப்பட்டன. இந்த நாணயம் பிரெஞ்சு ஃபிராங்குடன் நிலையான பரிமாற்ற விகிதத்தைக் கொண்டிருந்தது. இந்த நிலையான பரிமாற்ற விகிதத்தைப் பராமரிக்க, இந்த நாடுகளின் பணவியல் கொள்கை பிரான்ஸ் நாட்டின் மத்திய வங்கியால் கட்டுப்படுத்தப்பட்டது. பணவியல் கொள்கையை பொதுவான பொருளாதாரக் கொள்கையிலிருந்து பிரிக்க முடியாததால், இந்நாடுகளின் பொருளாதாரக் கொள்கையும் பெரும்பாலும் பிரான்ஸால் கட்டுப்படுத்தப்பட்டது.

இந்த முழு ஏற்பாடும் பிரான்ஸ் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்த பிறகும் தொடர்ந்தது. எனவே, பிரான்சின் முன்னாள் காலனி நாடுகளின் சுதந்திரம் எப்போதும் கடுமையாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்த காலனித்துவ அமைப்பிலிருந்து வெளியேற, காலனி நாடுகளில் அதிகாரத்தைக் கைப்பற்றிய புரட்சியாளர்கள் மேற்கொண்ட முயற்சிகள் அமெரிக்க ஆதரவுடன் பிரான்ஸால் கொடூரமாக நசுக்கப்பட்டன.

**தோமஸ் சங்காராவின் படுகொலை**

மேற்கு ஆப்பிரிக்க நாடான புர்கினோ பாசோவில் அதிகாரத்திற்கு வந்த புரட்சியாளர் தோமஸ் சங்காரா, தனது நாட்டிலிருந்து பிரான்ஸ் இராணுவத்தை வெளியேற்ற விரும்பினார். அவர் தனது கட்சி உறுப்பினர் ஒருவரால் நடத்தப்பட்ட ஆட்சிக்கவிழ்ப்பு சதியில் கொல்லப்பட்டார். இந்த ஆட்சிக்கவிழ்ப்பும் படுகொலையும் தெளிவாக பிரான்சின் தூண்டுதலாலும் ஆதரவுடனும் நடைபெற்றது. எனினும், இந்த நாடுகளில் புதிய காலனி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

*பேராசிரியர் பிரபாத் பட்நாயக்*

**இப்ராஹிம் தரோரின் எழுச்சி**

இத்தகைய பின்னணியில் 2022 இல் புர்கினோ பாசோவில் அமைக்கப்பட்ட "பாதுகாப்பு மற்றும் நாட்டை மீட்டெடுக்கும் தேசப்பற்று இயக்கத்தின்" (PMSR) இளம் தலைவரான கேப்டன் இப்ராஹிம் தரோர், 2022 செப்டம்பர் 30 அன்று அந்நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு, தனது நாட்டிலிருந்து பிரான்ஸ் படைகளை வெளியேற வலியுறுத்தினார். அதில் வெற்றியும் பெற்றார். மேலும், தனது நாடு சிக்கியிருந்த சிஎப்ஏ ஃபிராங்க் நாணய ஏற்பாட்டிற்கும் முடிவு கட்டினார். பின்னர், தனது அண்டை நாடுகளான மாலி மற்றும் நைஜருடன் இணைந்து "சஹேல் நாடுகளின் கூட்டமைப்பை" (AES) – அதாவது மேற்கு ஆபிரிக்க நாடுகளின் கூட்டமைப்பு – உருவாக்கினார். இந்த இரண்டு நாடுகளும் காலனியாதிக்கத்திலிருந்து உண்மையான விடுதலைக்கான ஆர்வத்தால் உந்தப்பட்டிருந்தன. பிரான்ஸ் மற்றும் அமெரிக்கப் படைகள் நைஜரிலிருந்து வெளியேற்றப்பட்டன. அங்கிருந்த பெண்டகன் டிரோன் நிலையமும் மூடப்பட்டது. இவ்வாறு, கனிம வளங்கள் மிகவும் செழிப்பாக உள்ள பகுதியில் சஹேல் கூட்டமைப்பு ஏகாதிபத்தியத்திற்கு ஒரு முள்ளாக உருவெடுக்கத் தொடங்கியது.

**தங்க வளத்தின் தேசியமயமாக்கல்**

இந்த கனிம வளங்களில் தங்கம் முக்கிய இடம் வகிக்கிறது. புர்கினோ பாசோ ஆபிரிக்காவின் மிகப்பெரிய தங்க உற்பத்தியாளர்களில் ஒன்றாகும். 2024 இல் 57 தொன் தங்கத்தை இந்நாடு உற்பத்தி செய்தது. ஆனால் அந்த நாட்டு மக்கள் இத்தங்க உற்பத்தியில் இருந்து எந்தப் பலனும் பெறவில்லை. தங்கச் சுரங்கங்களை உடைமையாக்கிக் கொண்டுள்ள வெளிநாட்டு நிறுவனங்களுக்கே தங்கத்திலிருந்து கிடைக்கும் பெரும்பகுதி வருவாய் சென்றது.

இப்ராஹிம் தரோர் தலைமையிலான அரசாங்கம் 2024 இல் சோபாமிப் (SOPAMIB) என்ற அரசு நிறுவனத்தை உருவாக்கி, தங்கம் எடுக்கும் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து சுரங்கங்களைப் படிப்படியாக கைப்பற்றுவதில் ஈடுபடுத்தியது. அரசுடைமையாக்கப்பட்ட தங்கச் சுரங்கங்களிலிருந்து புர்கினோ பாசோ அரசாங்கத்திற்குக் கிடைத்த அதிக வருவாயை நாட்டைத் தொழில்மயமாக்குவதற்கும், புர்கினோ பாசோ மக்களிடையே கல்வி மற்றும் சுகாதாரத்தை அதிகரிப்பதற்கும் மிகத் துரிதமாக பயன்படுத்தியது. தங்க விலை சமீபத்தில் உயர்ந்து வருகின்றது. டொலரின் எதிர்காலம் குறித்த சந்தேகங்கள் எழுந்து, பலர் டொலருக்குப் பதிலாக தங்கத்தை வைத்திருக்க முயற்சிக்கும் இந்தச் சூழலை புர்கினோ பாசோ அரசு பயன்படுத்திக் கொண்டது. இதன் மூலம், பிரான்ஸ் படைகளை தனது நாட்டிலிருந்து வெளியேற்றியதன் விளைவாக மேற்குலக நாடுகள்

நேரடியாகவும் மறைமுகமாகவும் விதித்த பொருளாதாரத் தடைகளின் விளைவுகளை ஓரளவுக்கு எதிர்கொள்ளும் நிலைக்கு புர்கினோ பாசோ வந்துள்ளது.

**பொருளாதார சுயாட்சிக்கான நடவடிக்கைகள்**

இப்ராஹிமின் அரசாங்கம் கைவினைத் தங்கத் துறையையும் ஒழுங்குபடுத்தியது. நாட்டில் தங்க சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்தது. மேலும், புர்கினோ பாசோவின் பிற முதன்மை உற்பத்திப் பொருட்களை உள்நாட்டிலேயே பதப்படுத்த முயன்றது. விவசாயிகளுக்கு வேளாண் உற்பத்தியை அதிகரிக்க உதவியது. மற்றும் உணவு தானிய தன்னிறைவை அடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த நடவடிக்கைகள் எதிர்பார்த்தபடியே அமெரிக்காவின் ஆத்திரத்தைத் தூண்டின.

அமெரிக்க செனட் குழு முன்பாக நடைபெற்ற ஒரு விசாரணையில், அமெரிக்க ஆபிரிக்க இராணுவப் பிரிவின் (ஆபிரிக்காம் –AFRICOM) தலைவரான ஜெனரல் மைக்கேல் லாங்கி, தங்கத்திலிருந்து பெற்ற வருமானத்தை இப்ராஹிம் தரோர் தனது சொந்தப் பயன்பாட்டிற்காக, குறிப்பாக தனது தனிப்பட்ட பாதுகாப்பை அதிகரிப்பதற்காகப் பயன்படுத்துவதாக தீய நோக்குடன் குற்றம் சாட்டினார். மைக்கேலின் இந்தக் கருத்துக்கள் ஆபிரிக்கா முழுவதும் ஊடகங்களால் பரவலாக விளம்பரப்படுத்தப்பட்டன. ஆனால் ஆபிரிக்கக் கண்டம் முழுவதும் உள்ள மக்களிடமிருந்து இது பரவலான எதிர் விமர்சனத்தைப் பெற்றது.

**ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி**

லாங்கியின் கருத்துக்கள் இப்ராஹிமுக்கு எதிரான ஆட்சிக்கவிழ்ப்புக்கு தளம் அமைக்கும் நோக்கத்தை கொண்டிருக்கலாம். இப்ராஹிம் தரோர் அரசு “சர்வாதிகாரம்” என்றும், புர்கினோ பாசோவில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்றும் மேற்கு நாடுகளில் பெயரிடப்படாத மூலங்களிலிருந்து எழுதப்பட்ட கட்டுரைகளுக்கு மத்தியில், ஏப்ரல் 16 அன்று ஒரு ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி நடைபெற்றது. இருப்பினும், இந்த முயற்சி வெற்றி பெறவில்லை, சதிகாரர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன் மூலம் இப்ராஹிம் தரோர்–தாமஸ் சங்காராவுக்கு ஏற்பட்ட கதி நேராமல் தப்பினார். ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி என்பது, காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற முயல்கிற ஆபிரிக்க அரசாங்கங்களுக்கு ஏகாதிபத்தியத்தின் கணிக்கக் கூடிய பழிவாங்கல் ஆகும். ஆபிரிக்கக் கண்டத்தில் காலனி ஆதிக்க விடுதலைப் போராட்டம் எதிர் கொள்ளும் சிரமங்களை இது உணர்த்துகிறது. இந்தச் சிரமங்கள் பல மூலங்களிலிருந்து எழுகின்றன.

**பல்முனை சவால்கள்**

புர்கினோ பாசோ, ஏகாதிபத்தியத்தை எதிர்கொள்வதோடு, அந்நாட்டின் நிலப்பரப்பில் 40 சதவீதத்தை கட்டுப்படுத்தும் இஸ்லாமிய பயங்கரவாதிகளின் அட்டூழியத்தையும் ஒரே நேரத்தில் எதிர்கொள்கிறது. கூடுதலாக, அந்தப் பகுதி ஏகாதிபத்தியத்தால் நிதியளிக்கப்படும் மேற்கத்திய சார்பு ஆட்சிகளைக் கொண்டுள்ளது. இந்த ஆட்சிகள் சடங்குப்பூர்வமாக நடத்தப்படும் தேர்தல்கள் மூலம் அதிகாரத்தைத் தக்க வைத்துள்ளன. இத்தேர்தல்களில், உண்மையான ஆளுமை இல்லாத மக்கள் பங்கேற்க அனுமதிக்கப்படுகிறார்கள். ஏகாதிபத்தியம் இத்தகைய ஆட்சிகளைப் பயன்படுத்தி தனது நோக்கங்களை அடைகிறது. முரண்பாடான அரசாங்கங்களுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிப்பது முதல் அவற்றிற்கு எதிராக ஆட்சிக்கவிழ்ப்புகளை நடத்த தளம் அமைப்பது வரை பல்வேறு வழிகளில் இவை பயன்படுத்தப்படுகின்றன.

**இகோவாஸின் (ECOWAS) நிலைப்பாடு**

உதாரணமாக, ‘மேற்கு ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதார அமைப்பு’ (இகோவாஸ் – ECOWAS) புர்கினோ பாசோவுக்கு எதிராக அணி திரட்டப்பட்டது. ஜனநாயகத்தைப் பாதுகாப்பது என்ற பெயரில் புர்கினோ பாசோவுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிப்போம் என அது மிரட்டியது (ஏனெனில் புரட்சிகர ஆட்சி “ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட” மேற்கத்திய ஆதரவு அரசாங்கத்தை கவிழ்த்து அதிகாரத்திற்கு வந்திருந்தது). ஆனால் இந்த முயற்சி பெரிதாகப் பயனளிக்கவில்லை. ஏனெனில், விசித்திரமாக, “ஜனநாயக எதிர்ப்பாளர்” என்று அழைக்கப்பட்ட இப்ராஹிம் தரோர், புர்கினோ பாசோ மக்களிடையே வலுவான ஆதரவைப் பெற்றிருந்தார். இது அவரது அரசாங்கத்திற்கு ஆதரவாக வீதிகளில் நடைபெற்ற மிகப் பெரிய ஆர்ப்பாட்டங்களில் வெளிப்பட்டது.

இந்த நிலையில் தான் இகோவாஸ் (ECOWAS) இலிருந்து பிரிந்து சஹேல் கூட்டமைப்பு (AES) உருவாக்கப்பட்டது. அண்டை நாடான ஐவரி கோஸ்ட், புர்கினோ பாசோவில் ஆட்சிக்கவிழ்ப்புகளை நடத்துவதற்கு பிரெஞ்சு நலன்களுக்கான தளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில், தோமஸ் சங்காராவுக்கு எதிரான ஆட்சிக்கவிழ்ப்பு சதிகாரர்கள் இறுதியில் ஐவரி கோஸ்ட்டுக்குத் தப்பிச் சென்று, அங்கு இன்னும் புகலிடம் பெற்று வாழ்கின்றனர்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற தோல்வியுற்ற ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியும் ஐவரி கோஸ்டை தளமாகப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. ஆபிரிக்க ஒற்றுமை இத்தகைய பின்னணியில், மேற்கு ஆபிரிக்காவில் தொடங்கப்பட்ட காலனி ஆதிக்க எதிர்ப்பு விடுதலை முயற்சிகள், ஆபிரிக்கக் கண்டம் முழுவதும் மிகப் பெரிய அளவிற்கு மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் ஆபிரிக்கா முழுவதும் இப்ராஹிம் தரோருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களை நடத்தி, ஏகாதிபத்தியவாதிகளை புர்கினோ பாசோவிலிருந்து வெளியேறிச் செல்லுமாறு வற்புறுத்தினர்.

ஏகாதிபத்திய சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட பாட்ரிஸ் லுமும்பா, அமில்கார் கப்ரால், எட்வர்டோ மோண்ட்லேன், தோமஸ் சங்காரா ஆகியோர், தங்கள் உயிரைத் தியாகம் செய்தகுவாமே நிக்ரூமா, ஜூலியஸ் நைரேரே ஆகியோர் தங்கள் வாழ்நாள் முழுவதும் போராடிய நோக்கம், – காலனியாதிக்க எதிர்ப்பும் பொருளாதாரச் சுரண்டலில் இருந்து விடுதலையும் – ஆபிரிக்க மக்களிடையே வலுவாக எதிரொலிக்கிறது. ஆபிரிக்காவின் விடுதலைக்கான போராட்டத்தில் ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கத்தை நாம் தற்போது காண்கிறோம்.

**ஏகாதிபத்தியத்தின் கொடூரம்**

வரும் நாட்களில் இந்தப் போராட்டத்திற்கு எதிராக ஏகாதிபத்தியம் இன்னும் கொடூரமாக மாறும். பழைய பிரெஞ்சு நலன்களுக்கு மேலதிகமாக, உலகம் முழுவதும் மூலப்பொருட்களுக்கான டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தின் புதிய தேடலும் இப்போது சேர்ந்து உள்ளது. இந்த

தேடலில் ஆபிரிக்கா நிச்சயமாக முக்கியப் பங்கு வகிக்கும்.

உண்மையில், ட்ரம்ப் ஏற்கனவே கொங்கோ அரசின் ஒத்துழைப்புடன் கொங்கோவின் கனிம வளங்களைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டத்தை வகுத்துள்ளார். உலகின் கனிம வளங்களை, குறிப்பாக புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்குத் தேவையான வளங்கள் மீது ஆதிக்கம் செலுத்த ட்ரம்ப், அவசரமான முயற்சிகளில் இருக்கிறார். இந்த அவசரம் அவரது உக்ரைன் ஒப்பந்தத்தில், கிரீன்லாந்தை கைப்பற்றும் அவரது விருப்பத்தில், கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாநிலமாக ஆக்கும் திட்டங்களில், கடல் தரையைக் கூட கட்டுப்படுத்த அவர் கொண்டுள்ள பேராசை நோக்கங்களில் தெளிவாகத் தெரிகிறது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போரில் "நேர்மையான மத்தியஸ்தர்" என்ற பெயரில் செயல்பட அவர் கொண்டுள்ள விருப்பமும் இரு நாடுகளின் செழிப்பான கனிம வளங்களைக் கைப்பற்றும் அவரது விருப்பத்துடன் தொடர்பில்லாமல் இல்லை.

**எதிர்காலப் போராட்டம்**

வரும் நாட்களில் ஆபிரிக்கா ஒருபுறம் ஏகாதிபத்தியத்திற்கும், மறுபுறம் காலனி ஆதிக்க விடுதலைக்கான சக்திகளுக்கும் இடையே தீவிர போராட்டக்களமாக உருவாகும். முன்னது, ஆப்பிரிக்காவின் செழுமையான இயற்கை வளங்களைத் தனக்காகக் கட்டுப்படுத்த விரும்புகிறது. பின்னது, ஆபிரிக்க மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக இந்த வளங்களைப் பெற விரும்புகிறது.

பீப்பிள்ஸ் டெமாக்ரசி (மே 11, 2025)
தமிழில் : சேதுசிவன்

## அரபு நாடுகளுடன் தன் குடும்ப நிறுவனங்களின் வணிக ஒப்பந்தத்தை ஏற்படுத்திய ட்ரம்ப்

அரபு நாடுகளுக்கு அரசுமுறை பயணமாகச் சென்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தன் குடும்ப நிறுவனங்களுக்கான வணிக ஒப்பந்தங்களை ஏற்படுத்தியுள்ளார். மேற்கு ஆசிய பிராந்தியத்தில் பெரும் போர்ப் பதற்றம் நிலவி வரும் சூழலில், மே மாதம் 13–16ந் திகதிகளில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சவூதி அரேபியா, கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம் என மூன்று நாடுகளுக்கு அரசு முறை பயணமாக மேற்கொண்டார். இந்த பயணத்தின் போது பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடத்தியதுடன் பொருளாதார ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டார். இப்பயணத்தில் அமெரிக்காவிடம் இருந்து 142 பில்லியன் டொலர்கள் மதிப்பிலான ஆயுதங்களை சவூதி அரேபியா வாங்க வேண்டும் என்ற ஒப்பந்தமும், கட்டார் அரசுடன் 1.4 பில்லியன் டொலர்களுக்கு ஆயுத ஒப்பந்தமும், அமெரிக்காவில் சுமார் 600 பில்லியன் டொலர்கள் வரை முதலீடு செய்வதற்கான ஒப்பந்தத்தையும் அமெரிக்கா ஏற்படுத்தியது.

இந்த பயணத்தின் போது ட்ரம்ப் குடும்பத்தின் தனிப்பட்ட வணிக நலன்களுக்கான ஒப்பந்தங்களையும் அவர் மேற்கொண்டுள்ளார். ட்ரம்பின் மகனான எரிக் ட்ரம்ப், ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைநகர் துபாயில் 80 மாடி கட்டடம் கட்டத் திட்டமிட்டுள்ளார். அதற்கான பேச்சு வார்த்தையை அந்நாட்டுடன் நடத்தியுள்ளார். இது போல கத்தாரில் 5.5 பில்லியன் டொலர்கள் மதிப்பிலான கோல்ஃப் கிளப் (Golf club) கட்டுவதற்கான பேச்சுவார்த்தையும் நடத்தியுள்ளார். இப்பயணத்தில் கட்டார் அரசு சுமார் 400 மில்லியன் டொலர்கள் மதிப்பிலான போயிங் விமானத்தை ட்ரம்பிற்கு பரிசாகவும் கொடுத்துள்ளது. மத்திய கிழக்கில் அதிகரித்து வருகின்ற சீனாவின் வளர்ச்சியை தடுத்து அமெரிக்காவின் பிராந்திய ஆதிக்கத்தை மீண்டும் அதிகப்படுத்தும் நடவடிக்கையாகவே இப்பயணம் நடந்துள்ளது என கூறப்பட்டுள்ளது.

## *தாக்குதலை நிறுத்துக!*

பலஸ்தீன மக்கள் மீதான கொடூரத் தாக்குதலைத் தொடர்ந்து ஈரானுக்கு எதிராக இஸ்ரேல் தொடுத்துள்ள போரின் காரணமாக மேற்காசிய பகுதி முழுவதும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இஸ்ரேல் ஈரானின் அணு ஆயுத உற்பத்தி நிலையங்களை தாக்கி அழிப்பதாகக் கூறிக் கொண்டு தொடுத்த தாக்குதலால் விஞ்ஞானிகள் உள்பட பலர் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் தலைநகர் உட்பட பல்வேறு இடங்களில் ஈரான் தாக்குதல் தொடுத்துள்ளது. இது ஒரு பெரும் போருக்கு இட்டுச் செல்லும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேலின் அடாவடித்தனம் அனைத்தின் பின்னணியிலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் உள்ளது. ஆனால் இந்தத் தாக்குதலுக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பம்மாத்து செய்கிறார். ஆனால் ஈரான் மீது தாக்குதல் தொடுப்பது குறித்து அமெரிக்காவிற்கு தகவல் தெரிவித்ததாக இஸ்ரேல் ஒப்புக் கொள்கிறது. இந்த இரு நாட்டு அரசுகளும் கூட்டுச்சேர்ந்து கொண்டு அடாவடி செய்வதன் மூலம் இந்த பிராந்தியம் முழு வதையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்ற நீண்டநாள் திட்டத்தை நிறைவேற்ற முயல்கின்றனர்.

பலஸ்தீன மக்களின் துயரம் தொடர் கதையாக உள்ளது. கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள் என அனைத்தையும் இஸ்ரேல் இராணுவம் தாக்கி அழிக்கிறது. பட்டினியால் பலஸ்தீன குழந்தைகளும், பொது மக்களும் செத்து விழுவது இந்த நூற்றாண்டின் பேரவலமாக மாறியுள்ளது. இந்தத் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று உலகின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடந்து வரும் நிலையில், தனது தாக்குதலை அமெரிக்காவின் துணையோடு விரிவுபடுத்தியுள்ளது.

ஈரானிய எண்ணெய் வயல்கள் மற்றும் எரிவாயு சேமிப்பு நிலையங்களை குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல் தொடுப்பதால் சர்வதேச அளவில் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இது இந்தியா உட்பட அனைத்து நாடுகளையும் பாதிக்கும்.

நெடுநாளாக நீடித்து வரும் பலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலின் இனவெறி தாக்குதலை தடுத்து நிறுத்த ஐ.நா. சபை தவறிவிட்டது. இப்போது இஸ்ரேல், ஈரான் மோதலிலும் கூட ஐ.நா. வெறும் பார்வையாளராகவே செயல்படுகிறது. இது உலகின் அமைதிக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

வளர்ச்சியின்மை காரணமாக உலக மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

**தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

நேரத்தில் ஜனாதிபதித் தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிட்டு சஜித் பிரேமதாசவும், ரணில் விக்கிரமசிங்கவும் பெற்ற வாக்குகளின் கூட்டுத்தொகை 59 சத வீதமாகும். எனவே, இந்த இருவரில் ஒருவர் விட்டுக் கொடுத்திருந்தால், அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கவே முடியாது. அதன் காரணமாக, நாடாளுமன்றத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றியீட்டியிருக்க முடியாது. நாட்டின் சரித்திரமே தலைகீழாக மாறியிருக்கும்.

அதேபோன்ற ஒரு நிலைதான் வடக்கு கிழக்கிலும் ஏற்பட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த சில கட்சிகள் கூட்டமைப்பை விட்டு வெளியேறி வெவ்வேறு அணிகளாக உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டன. அதனால் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியும் தனியாகப் போட்டியிட்டது.

மறுபக்கத்தில், தமிழ் தேசியவாதக் கட்சிகளுக்கு மாற்றாக நீண்ட காலமாகச் செயற்பட்டு வரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் (ஈபிடிபி) தனியாகப் போட்டியிட்டது. அதேபோல, கிழக்கு மாகாணத்தில் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, வேறு இரு கட்சிகளுடன் "கிழக்கு மக்கள் கூட்டணி" என்ற பெயரில் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது.

இந்த நிலைமைகளால், வடக்கு கிழக்கில் எந்தவொரு அணியும் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தைத் தனித்துக் கைப்பற்றும் அளவுக்கு வெற்றி பெறவில்லை. அதன் காரணமாக பிரதான கட்சியான தமிழரசுக் கட்சி, தன்னை விட்டுப் பிரிந்து போன கட்சிகளுடன் மட்டுமின்றி, நீண்ட காலமாக தம்மால் "அரச அடிவருடிகள்" என்றும், "ஒட்டுக்குழு" என்றும் வர்ணிக்கப்பட்ட ஈபிடிபியின் ஆதரவையும் பெற்று சில சபைகளில் அதிகாரத்தைக் கைப்பற்றும் நிலைமைக்கு உள்ளாகியுள்ளது.

அது மட்டுமின்றி, முஸ்லீம் மக்களைப் பிரதிநித்திவுப்படுத்தும் சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பனவற்றின் ஆதரவையும், சில இடங்களில் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி என்பனவற்றின் ஆதரவையும் பெற்று, வடக்கு கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றும் நிலைக்கும் தமிழரசுக் கட்சி சென்றுள்ளது.

வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் – முஸ்லீம் சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள், கடந்த நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் தற்போது உள்ளது போன்ற ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்தியிருந்தால், தேசிய மக்கள் சக்தி வடக்கு கிழக்கில் சில வேளைகளில் ஒரு உறுப்பினரைக்கூட பெற்றிருக்க முடியாது.

தெற்கில் உள்ள எதிர்க்கட்சிகளும் சரி, வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் – முஸ்லீம் கட்சிகளும் சரி, முன்னதாக இத்தகைய ஒரு ஐக்கியத்துக்குச் செல்லாததன் காரணம் சுயநலமே தவிர வேறு ஒன்றுமல்ல. அதே நேரத்தில், தற்பொழுது இந்தக் கட்சிகள் கூட்டுச் சேர்ந்திருப்பதற்கும் காரணம் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற சுயநலமே.

இந்தக் கட்சிகள் எல்லாமே முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தில் ஊறிப்போன கட்சிகள் என்றபடியால், அந்தக் கட்சிகள் இத்தகைய கூட்டுகளை அமைப்பது தவிர்க்க முடியாததும், இயல்பானதும்தான். ஆனால், புத்திசாலித்தனமாக இந்தக் கூட்டுகளை தேர்தல்களுக்கு முன்னர் அமைப்பது பற்றி யோசித்திருந்தால், குறைந்தபட்சம் தமது பொது எதிரியான தேசிய மக்கள் சக்தியையாவது தேர்தல்களில் தோற்கடித்திருக்க முடியும்.

மறுபக்கத்தில், கொள்கையற்ற, வெறும் பதவித் தேவைகளுக்காக ஏற்படும் இந்தக் கூட்டுகள் நீடித்து நிலைக்குமா என்பதும் ஒரு பக்கத்தில் கேள்விக்குறியாக இருப்பதுடன், மக்கள் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து, ஒரு பரந்துபட்ட ஐக்கிய முன்னணியாக அமையாமல் ஏற்படும் இத்தகைய கூட்டுகளால் மக்களுக்கு என்ன நன்மை என்ற கேள்வியும் இருக்கிறது.

அப்படி மக்கள் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து ஒரு பரந்துபட்ட முன்னணியை உருவாக்கும் ஆற்றல், தெற்கிலும், வடக்கு கிழக்கிலும் உள்ள கட்சிகளின் இன்றைய தலைமைகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பிரதான தலைமைகளுக்கு அடுத்த அடுத்த மட்டங்களில் உள்ள சக்திகளும், இந்தக் கட்சிகளின் ஊழியர்கள் மற்றும் அடிமட்ட உறுப்பினர்களும் முன்முயற்சி எடுத்தால், பரந்துபட்ட மக்கள் நலக் கூட்டணியை உருவாக்க முடியும்.

அடுத்து வரவிருக்கும் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் அத்தகைய ஒரு கூட்டு முன்னணியை உருவாக்கினால், குறைந்தபட்சம் மாகாண சபைத் தேர்தலிலாவது வெற்றி வாய்ப்பைப் பெறலாம்.

அதிலும் தவறு விட்டால், ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி சவால்கள் எதுவுமின்றி, அடுத்த ஐந்து வருடங்களுக்கு நாட்டில் கோலோச்சுவதை எவராலும் தடுக்க முடியாது.

---

**11ம் பக்கத்தொடர்ச்சி...**


தோற்கடிக்கப்பட்டவர்களும் – இந்தப் பக்கத்தில் தோற்கடிக்கப்பட்டவர்கள் – ஒரு சட்டப் புரட்சியின் மூலம் புதியதொரு அடிப்படைச் சட்டத்தை இயற்றுவதில் பொதுவான காரணத்தை உருவாக்க ஒப்புக் கொண்டால், நீங்கள் அவ்வாறு செய்ய முடியாது என்று எந்த சட்டமும் கூறவில்லை."

*1972* அரசியலமைப்பின் சில அம்சங்களுடன் எனக்கு உடன்பாடு கிடையாது என்றாலும், சட்ட மற்றும் அரசியலமைப்பு தடைகள் நிறைந்த கண்ணிவெடிப் புலத்தின் ஊடாக, *1971*, ஏப்ரல் 5 ஆம் திகதி முழு ஆவேசத்துடன் ஒரு சவுக்கடியைப் போல வெடித்த முற்றிலும் எதிர்பாராத கிளர்ச்சியையும் கடந்து, இந்த செயல்முறையை வெற்றிகரமாக வழிநடத்திச் செல்வதில் ஒரு சிறிய பங்கை ஆற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

இந்த நாடு தனித்துவமான ஒருதலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனத்தை மேற்கொண்டு, இலங்கையின் சுயாதீன, இறையாண்மை மற்றும் சுதந்திர குடியரசாக உருவான நாளின் ஆண்டு நிறைவான மே 22 ஐ நாங்கள் ஏன் புறக்கணிக்கின்றோம்?

(இக்கட்டுரை 'டெய்லிமிரர்' பத்திரிகையில் மே 22, 2025 அன்று வெளியாகியது)

# இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் மாற்றினாரா?



இலங்கை வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்ட வியத்தகு மாற்றம் என்று விமர்சகர்கள் விவரித்து வருவதை அடுத்து, இலங்கை இப்போது கடுமையான இராஜதந்திர நெருக்கடியை எதிர்கொள்கின்றது. இந்த மாற்றம் ஏற்கனவே இலங்கைத் தீவுக்கான நேரடி விமானங்களை இடைநிறுத்த ரஷ்யாவை தூண்டியுள்ளது. நீண்ட காலமாக உள்ளூர் உல்லாச விடுதிகள் மற்றும் கடலோர நகரங்களில் பெரும் செலவு செய்பவர்களாக ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் அறியப்பட்டுள்ளதால், இந்த வீழ்ச்சி இலங்கையின் சுற்றுலாத் துறைக்கு பெரிய காயத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கத்தின் கருத்தியல் தாங்கிகளை மறுவடிவமைப்பதில் அமெரிக்க தூதர் ஜூலி சுங் முக்கிய பங்கு வகித்துள்ளார் என்ற ஊகம் வளர்ந்து வருகின்றது. பாரம்பரியமாக, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேனா தலைமையிலான அரசாங்கங்கள் உட்பட இலங்கையின் இடதுசாரி சார்புடைய அரசாங்கங்கள் மொஸ்கோவுடன் நெருக்கமான உறவுகளைப் பேணி வந்தன. NPP ஐ நிலைநிறுத்தும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் (JVP) ரஷ்யாவுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான அணிசேர்க்கையை குறிப்பாக எடுத்துக் கொண்டால், அண்மைய மாதங்களில் விவகாரங்கள் கடுமையாக பாதிப்படைந்துள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னர் நடைபெற்ற முக்கியமானதொரு கூட்டத்தில், ஜனாதிபதி அனுர குமார 56 வீதமான அங்கீகார மதிப்பீட்டைக் கொண்டிருப்பதாக கருத்துக் கணிப்பொன்று தெரிவிப்பதாக தூதுவர் சுங் விளக்கியதாக கூறப்படுகிறது. கருத்துக் கணிப்பு உற்சாகமூட்டுவதாக முன்வைக்கப்பட்ட அதேவேளை, உண்மையான தேர்தல் முடிவுகள் வேறுபட்ட கதையைக் கூறின. இது கருத்தியல் கயிறு திரிப்புகளுடன் செருகப்பட்ட இராஜதந்திர ஊக்குவிப்பாக இருந்திருக்கலாம் என்ற சந்தேகங்களுக்கு வலுச் சேர்த்துள்ளது.

ஜே.வி.பி.யின் 60 வது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களுக்கு வேகமாக முன்னேறுங்கள், அங்கு கட்சியின் கடந்த காலத்தை மதிக்க விரும்பாத எவரும் அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று ஜனாதிபதி (அண்மையில்) அறிவித்தார். ஜே.வி.பி.யின் மார்க்சிச அடித்தளத்திலிருந்து புதிய நிர்வாகம் தூர விலகி நிற்கின்றது என்ற கிசுகிசுப்புகள் அதிகரித்து வருவதையடுத்து, கட்சியின் அடித்தளத்திற்கு மீண்டும் உத்தரவாதம் அளிக்கும் முயற்சியாக இந்த அறிவிப்புக்கு பலர் வியாக்கியானம் கொடுத்துள்ளனர்.

இப்படியான கருத்துக்கள் இருந்தபோதிலும், இந்த மாற்றம் உண்மையானது என்று இராஜதந்திர உள்வட்டாரங்கள் கூறுகின்றன. ரஷ்யா மற்றும் சீனாவுடனான அதன் பாரம்பரிய விசுவாசத்தை படிப்படியாக அழித்து, மேற்கத்திய சார்பு நிலைப்பாட்டை நோக்கி அரசாங்கத்தை நகர்த்துவதில் தூதர் சுங் திரைக்குப் பின்னால் ஒரு முக்கிய பாத்திரம் வகித்துள்ளார் என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஜனாதிபதி அனுர குமார ஒரு உயர்மட்ட விமான நிலைய ஒப்பந்தத்தை இரத்து செய்ததைத் தொடர்ந்து, இந்த மறுசீரமைப்புக்கான மேலதிக சான்று கிடைத்துள்ளது. முந்தைய விக்கிரமசிங்க நிர்வாகம் அம்பாந்தோட்டையில் உள்ள மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை ரஷ்ய–இந்திய கூட்டமைப்புக்கு குத்தகைக்கு வழங்க ஒப்புதல் அளித்திருந்தார்கள். ஆனால் இந்த கூட்டு முயற்சியின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்த பிறகு, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி இந்த குத்தகை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவாரா என சகலரது கண்களும் அவரை நோக்கித் திரும்பின.

ரஷ்யாவில் நடைபெறும் பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கான தனிப்பட்ட அழைப்பை ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டாலும், ஜனாதிபதி அனுரா இறுதியில் அந்த நிகழ்வைத் தவிர்த்த கையோடு, உடனடியாகவே ரஷ்ய–இந்திய கூட்டமைப்பின் விமான நிலைய குத்தகை ஒப்பந்தத்தையும் நிறுத்தினார்.

இது ஒரு திட்டமிட்ட மூலோபாய முன்னெடுப்பினை அல்லது அரசியல் ரீதியாக தூண்டப்பட்ட மறு அணிசேர்க்கையினைக் குறிக்கின்றதோ இல்லையோ, இதன் விளைவுகள் விரைவாக கட்டவிழ்ந்து வருகின்றன. மொஸ்கோவுடனான நேரடி விமானத் தொடர்புகளை துண்டித்ததால், இராஜதந்திர முரண்பாடுகள் அதிகரித்து வரும் நிலையில், ரஷ்யாவிடமிருந்து இலங்கை திடீரென விலகிச் செல்வது பொருளாதார ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்ற வெறும் அடையாளத்தைவிட மேலானது என்பதை நிரூபித்து வருகின்றது. அத்தோடு வாஷிங்டனின் கைரேகைகள் எல்லா இடங்களிலும் இருப்பதையே சகல அறிகுறிகளும் காட்டுகின்றன.

(இக்கட்டுரை The Morning Telegraph பத்திரிகையில் மே 21, 2025 அன்று வெளியாகியது)